543



N47.1.3
208427

பாட்டு	சங்கீதம்	வசனம்
சிவன்	அனில் பிஸ்வாஸ், பாபநாசம் சிவன்	வி. கே. பி. ஸாரதி

ஸினேரியோ — டைரக்ஷன் — படப்பிடிப்பு

பி. எஸ். ரங்கா

மதுரை, திருச்சி, தஞ்சை :

பி. கே. பி. பில்ம்ஸ், மணச்சநல்லூர், திருச்சி.

ஆந்திரா, ஸீடட், நிஜாம், வட இந்தியா :

சம்ரியா டாக்கி டிஸ்ட்ரிபியூட்டர்ஸ், சென்னை (2)

மற்ற இடங்களைப் பற்றிய விவரங்களுக்கு :

தமிழ்நாடு டாக்கிஸ்,

கீழ்ப்பாக்கம் :: சென்னை.

P. S. கோவிந்தன்	U. R. ஜீவரத்னம்	V. A. செல்லப்பா
S. D. சுப்பையா	S. S. ராஜேந்திரன்	செளதாமினி
S. K. ராமராஜன்	காளி N. ரத்னம்	M. E. மாதவன்

ஏழுமலை P. S. ஞானம் K. P. ஜெயராமன் குமாரி ரமணி

மற்றும் பல நடிக நக்ஷத்திரங்கள் நடிக்கிறார்கள்

சங்கீதம்	நடனம்
ஜி. ராமனுதன்,	நிருத்ய சாம்ராட் கோபாலகிருஷ்ணன்.

விபரங்களுக்கு

மூர்த்தி பிக்சர்ஸ், எக்ஸ்டென்ஷன், சேலம்.

பிரதேச உரிமைகளுக்கு :

திருச்சி, தஞ்சை, மதுரை—தெரேஸா பிலிம்ஸ்,
20, புதுதெரு, கரூர்.
சேலம், கோயம்பத்தூர், நீலகிரி—பிரகாஷ் பிக்சர்ஸ்,
பஜார் தெரு, சேலம்.
இராமனுதபுரம், திருநெல்வேலி, புதுகோட்டை
ஸ்ரீ லக்ஷ்மி பிலிம்ஸ், கல்லிடைக்குறிச்சி.
மலபார்—மணி பிலிம்ஸ், செங்கோட்டை.

உங்களுக்கு சினிமா நக்ஷத்திரங்கள் வேண்டுமா?

208487

★

எங்களிடம் சினிமா நக்ஷத்திரங்களின் பிளாக்குகள் ஏராளமாக இருக்கின்றன.

★

குறைந்த விலைக்கு கொடுக்கப்படும்

★

பாசரசு காரியாலயம்

45-46, அரமணைக்காரத் தெரு,

சென்னை 1.

ரீடா

அழகிய கேசத்தை
வளர்க்கிறது

ரீடா கேசத்தின் ஆரோக்கியத்திற்கான ஒரு புது வழி. கேசத்திற்கு இயற்கையான சத்துவத்தை மயிர்க்கால் வழியாக அளிக்கிறது. பொடுக்கைப் போக்கி வழுக்கையைத் தடுத்து அழகு வாய்ந்து நீண்டு பட்டைப்போல் பளபளப்புள்ள கேசத்தை வளர்க்கிறது. அந்தமில்லாத சிகைக்கு மேனி கொடுத்து அலை அலையாக மயிர் உண்டாக்கும்.

ஒரு புட்டி ரீடா வாங்கி சேகத்திற்கு புது உயிரளித்து புது மேனியை உண்டாக்குங்கள். ரீடா எங்கும் கிடைக்கும். ஒரு புட்டியின் விலை 15 அணா

RITA
HAIR TONIC

ஹாஸ்யம் மனிதன் வாழ்நாளை அதிகப்படுத்துகிறது

அதிகநாள் வாழ்ந்திருக்க ஒரே டானிக்

அம்பி

(பாசரசு எழுதியது)

★ 104 பக்கங்கள்
★ சித்திரங்கள் நிறைந்தது

விலை ரு. 1—0—0 தபாலில் ரு. 1—4—0

★

பாசரசு காரியாலயம்
45-46, அரண்மனைக்காரத் தெரு, சென்னை 1.

இந்த ஈரல் குலை கட்டி
வியாதியை ஜம்மியின்
“லிவர்க்யூர்” தான் நிச்சய
மாக குணப்படுத்தும்.

ஜம்மி வெங்கடரமணய்யா & ஸன்ஸ்

மைலாபூர் :: :: மதருஸ்

Hoe & Co.

General Printers
and
Specialists in Offset
POSTER PRINTS

PHONE: 3712
MADRAS

இந்த மாதத்தின் அட்டை அழகியாக வரும் அதிருஷ்டம் வி. என். ஜானகிக்கு கிடைத்திருக்கிறது.

நல்ல உடலமைப்பு. வசீகரமான முகத்தோற்றம். மயக்கும் சக்தியைக் கொண்ட கருவிழிகள். வி. என். ஜானகி அழகிதான்.

ஜானகி எத்தனையோ படங்களில் நடித்திருக்கிறார். ஆனால் பேரும் புகழும் அடையப்போகும் படம் அவர் கடைசியாக நடித்த "தியாகி" யில்தான்.

இன்ப சாகரன், கிருஷ்ணன் தூது, சக்குபாய், சகுந்தலா, சாவித்திரி, சூர்யபுத்திரி, பக்திமாலா, அனந்தசயனம், தேவகன்யா, ராஜா பர்த்ரு ஹரி, மானசம்ரக்ஷனம், சகடயோகம் பங்கஜவல்லி, சந்திரலேகா, அபூர்வசிந்தாமணி, முதலியவைகளே அவர் நடித்த மற்ற படங்கள்.

இவர் பாபநாசம்சிவன் சகோதரர் பி. ஆர். ராஜகோபாலய்யரின் புதல்வி. வயது 24. சமூகப் படங்களில் நடிப்பதற்கேற்ற நல்ல முகவெட்டு இருப்பதால் டைரக்டர்கள் இவரைத் தேர்ந்தெடுப்பார்கள் என்பது நிச்சயம்.

பாசரசு

ஆசிரியர்கள்

எம். எஸ். பாசு

சரசுவதி பாசு

மலர் 1 | ஜுலை '47 | இதழ் 3

பக்கம்

அட்டை அழகி	5
இந்திய சமஸ்தானங்கள்	6
கதம்பம்	8
சிதறிய பொறிகள்	9
நீர்க்குமிழி	10
அளித்த பரிசு	15
இது சென்னை...!	19
திரு. வி. க.	20
கிருஷ்ண பட்சத்துச் சந்திரன்	21
எழுதியிருக்கிறார்கள்	26
அதிசயந்தான்!	30
நண்பர்கள் சங்கம்	31
லேகியம் எங்கே?	34
ஆயுள் தண்டனை	37

பாசரசு - சென்னை!

"பாசரசு" வில் வரும் கதைகளில் உள்ள பெயர்களும் சம்பவங்களும் கற்பனை.

மலர் 1 | ஜூலை 1947 | இதழ் 3

இந்திய சமஸ்தானங்கள்

இப்பொழுது பிரிட்டிஷ் ஆதிக்கம் இந்தியாவிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வருகிறது. சில இந்திய சமஸ்தானங்கள், இந்திய அரசாங்கத்திலிருந்து பிரிந்து நின்று தங்கள் யதேச்சாதிகாரத்தை நிலை நாட்ட வேண்டும் என்று கனவு காண்கின்றனர். வாஸ்தவத்தில் இதைக் கனவு என்று கூறினால் போதாது. பகற் கனவு என்று கூற வேண்டும். சில சமஸ்தானங்கள் இந்திய அரசாங்கத்தை எதிர்த்துச் சுதந்திரப் பிரகடனம் செய்திருப்பது மிகவும் பரிகசிக்கக் கூடிய விஷயமாகும். 'டான் க்விக்ஸாட்' என்னும் ஆங்கில நூலில் க்விக்ஸாட் என்பவன் காற்றாடியுடன் வீரப் போர் புரிந்த கதையுடன்தான் இதை ஒப்பிட வேண்டும்.

நூற்றைம்பது வருஷங்களாக பிரிட்டிஷ் ஆட்சியின் இரும்புப் பிடியில் அகப்பட்டுக் கொண்டிருந்த போது, இந்தச் சமஸ்தானங்கள் பிரிட்டிஷாரின் காலடியில் அடங்கி ஒடுங்கிக் கிருந்தன. இப்பொழுது இந்தியச் சுயாட்சி ஏற்பட்ட பிறகு இந்திய அரசாங்கத்துக்கு அவை அடங்கி நடக்க மறுக்கின்றன. இதை விதியின் விளையாட்டு என்றுதான் கூற வேண்டும்! சமஸ்தானங்கள் ஒன்று சேர்ந்து பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர்த்துப் போராடித் தங்கள் வீரத்தைக் காட்டி யிருந்தால் அது மிகவும் பாராட்டுக்குரிய விஷயமாகும்.

பிரிட்டிஷாரின் கைப்பொம்மைகளாகிய சமஸ்தா தானங்கள், அவர்கள் இந்தியாவை விட்டு வெளியேறிய பின்பும் தங்கள் பொம்மலாட்டத்தைத் தொடர்ந்து நடத்தலாமென்று பகற் கனவு காண்கின்றனர். சூத்திரக் கயிறும் அறுந்து, ஆட்டிவைப்பவனும் தொலைந்து போய் விட்டால் ஆட்டம் எப்படி நடக்கும்? பொம்மைகள் நாடக மேடையில் விழுந்து விட்டன. இந்தப் பொம்மலாட்டத்தை உயிர்பிக்க விரும்பும் ஆத்மாக்கள் சில இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் இந்தியப் பொது மக்கள் இதற்கு ஆதரவளிக்கக் கொஞ்சங் கூடத் தயாராயில்லை. பொது மக்களைச் சுரண்டித்தான் சமஸ்தானங்களின் பொம்மலாட்டம் நடந்து வந்தது. இந்தப் பொம்மலாட்டத்தின் வலிவைக் கொண்டுதான் பிரிட்டிஷார் இந்தியாவை நூற்றுக் கணக்கான வருஷம் அடக்கியாள முடிந்தது. இந்திய மண்ணில் பிரிட்டிஷ் அரசாங்கம் வேரோடி உறம் பெற்று நிற்கச் சந்தர்ப்பம் அளித்த பெருமை இந்திய சமஸ்தானத்தையே சேரும். அன்னிய ஆட்சிக்கு மீண்டும் சந்தர்ப்ப மளிக்க இந்தியப் பொது மக்கள் தயாராயிருந்தால் சமஸ்தானங்களின் யதேச்சதிகாரத்துக்கு இடங் கொடுப்பார்கள். ஆனால் மக்களின் மனப்பாள்மை அப்படியில்லை. இனியும் சமஸ்தானங்களின் களியாட்டம் தொடர்ந்து நடக்காது.

இந்திய அரசாங்கத்தின் உதவியில்லாமல் சமஸ்தானங்கள் தனித்து வாழ இயலாது. இதை இந்தியா மந்திரி லிஸ்டோவல் பிரபு நன்கு விளக்கி யிருக்கிறார். “சமஸ்தானங்கள் இந்தியாவுடனோ பாகிஸ்தானுடனோ சேர்ந்து வாழுவதுதான் நியாயம், சாத்தியமானதுங் கூட” என்று அவர் கூறியிருக்கிறார்.

இந்திய சமஸ்தானங்கள் தங்கள் துருப்பிடித்த விளையாட்டுக் கத்திகளைத் தீட்டிக் கொண்டு போருக்கெழுவதில் கொஞ்சமும் பயனில்லை. அதற்குப் பதிலாக இந்திய அரசாங்கத்துடன் ஒத்துழைத்துச் சுதந்திர அரசியல் சரிவர நடக்கத் துணைபுரிந்தால் தேச சேவை செய்தவர்களாவார்கள்.

கதம்பம்

சர்வம் தேசிய மயம்!

ஆகஸ்டு 1947-ம் ஆண்டிலேயே வெள்ளைக்காரர் நிச்சயமாக வெளியேறி விடுகிறார்கள். போய்த்தான் தீருவோம் என்கிறார்கள். இது இந்தியாவின் வருங்காலத்துக்கே ஒரு சுப சூசகம் என்பதில் ஐயமில்லை.

வெள்ளையர் வெளியேறினால் மக்களின் அடிமை மனப்பான்மையும் வெளியேறிவிடும். தடைப்பட்டுக் கிடக்கும் தேசியத் தொழில்கள் நன்கு செழித்து வளரும். இனி தொழில் ஸ்தாபனங்களைப் பொது ஜன சர்க்கார் ஏற்று நடத்தலாமல்லவா?

பொது ஜன சர்க்கார் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது பஸ் போக்கு வரத்துத் தான். அதிலும் நகர பஸ் போக்கு வரத்து மிகவும் ஊழல் மலிந்ததாகவும் சீர்கேடான நிலைமையிலும் இருக்கிறது. சென்னை நகரத்திலே போகும் 250 பஸ்களில் இருநூறு பஸ்களுக்கு மேல் பின்னாலிருந்து பிரயாணிகள் தள்ளவேண்டிய நிலையில்தான் இருக்கின்றன. அவசர சமயங்களில் பிரயாணிகள் பஸ்ஸில் ஏறுகின்றனர். பாதிதூரம் போனதும் கண்டக்டர் "ஸார், வண்டி போவாது! இறங்கித் தள்ளுங்க!" என்கிறான். அப்போது பிரயாணிகள் வேறு வழியில்லாமல் நெற்றி வேர்வை நிலத்தில் விழ வண்டியைத்தள்ள வேண்டியிருக்கிறது. இது சென்னையில் நாம் காணக்கூடிய காட்சி.

கண்டக்டர்களும் டிரைவர்களும் வைத்தது சட்டமாயிருக்கிறது. யாராவது ஒரு பிரயாணி பஸ் நிலையத்துக்கு வந்து "எந்த பஸ் முதலில் போகிறது, அப்பா?" என்று ஒரு கண்டக்டரையோ டிரைவரையோ கேட்டால் அவர்கள் மரியாதையற்ற முறையில் பேசுவது கேட்பவருக்கு சங்கடமாயிருக்கிறது.

"எந்த வண்டி போகிறதோ அதில் ஏறிக்கோ," என்று கண்டக்டர் பதிலளிப்பது சகஜமாயிருக்கிறது.

இதை அவசியம் பொது ஜன சர்க்கார் கவனித்து பஸ் போக்கு வரத்தைத் தேசிய மயமாக்குவது அவசியம். பழைய ஓட்டைப் பஸ்கள் அடியோடு தொலைந்து எல்லாம் தேசிய பஸ்ஸாக மாற்றப்பட்டால் தான் பஸ் போக்கு வரத்து சுகப்படும். சர்க்கார் இது விஷயத்தில் சிரத்தையெடுத்துக்கொண்டிருப்பது நல்ல பலனை அளிக்குமென்றுஎதிர்பார்க்கிறோம்.

சிதறிய பொறிகள்

இந்தியச் செல்வாக்குக்குள்ள அபாயம் மன்னர்களின்போக்குத்தான். பல சமஸ்தானங்களும் திருவாங்கூர், ஹைதராபாத் சமஸ்தானங்களைப் பின்பற்ற ஆரம்பித்தால், இந்தியா சிதறுண்டு அமைதி யின்மைக்கு இடமாகி விடும்.

ஸர் ஆர். கே. ஷண்முகம் செட்டியார்

* * *

காதலின் வலிமையையும் அற்புதத் தன்மையையும் எடுத்துக் காட்டும் 'கல் கவிதை'யான தாஜ்மஹால் கட்டி முடிந்து இன்றைக்குச் சரியாக முந்நூற்றிரண்டு வருஷங்களாகின்றன. 1645ம் ஞு ஜனவரிமீ 30-ந் தேதி யன்றுதான் பூர்த்தியடைந்த தாஜ்மஹாலை ஷாஜஹான் போய்ப் பார்த்தான்.

ஹிந்துஸ்தான்

* * *

1935-ம் வருஷம் பிப்ரவரி மாதம் ஒரு கார்டு ஒருவருக்குப் போஸ்டு செய்யப்பட்டது. 36-ம் வருஷம் பிப்ரவரி 21 ம் தேதி அது காசிக்கு வந்து சேர்ந்தது. குறிப்பிடப்பட்டிருந்த விலாசத்தில் இவ் வருஷம் அது ஜூன் மாதம் 4-ம் தேதி சேர்க்கப்பட்டதாம். இவ் விஷயங்களெல்லாம் அக் கார்டின் மேல் காணப்படும் தபால் முத்திரைகளினுல் தெரிய வருகின்றன.

இதற்கிடையில் கடிதம் எழுதியவரும் விலாசதாரரும் இறந்து விட்டனராம்.

பத்திரிகை செய்தி

* * *

"ஹோட்டல்களுக்குப் போகிறவர்களின் தேவைகள் இன்னவை என்பதுகூட எனக்குத் தெரியாது. ஆனல் பொது ஜனங்களுக்கு ஹோட்டல்கள் செய்து வரும் சேவையை நான் நன்கு உணர்கிறேன்."

சென்னை ஹோட்டல்காரர் மகா நாட்டில் டாக்டர் சுப்ராயன்.

* * *

கலிபோர்னியாவில் ஒரு கோட்டீஸ்வர ஸ்திரீ தான் வளர்த்து வந்த பூனையின் போஷணைக்காகத் தனது மரண சாசனத்தில் மூவாயிரம் பவுனும் ஒரு பங்களாவும் எழுதி வைத்திருக்கிருள்.

பத்திரிகை செய்தி



நீர்க் குமிழி

சரசுவதீ பாசு

சிதறிய துளி போல், ஓரமாய்த் தன்னந் தனியே இருந்த அந்தச் சிறு குடிசையில் அகல் விளக்கு 'மினுக் மினுக்' கென்று யாரையோ கண்டு வெட்கப் படுவது போல் கண் சிமிட்டிக் கொண்டிருந்தது. கலங்கிய கண்களுடன் அந்த விளக்கையே உற்றுப் பார்த்துக் கொண்டு படுத்திருந்தாள் அந்தப் பேதைப் பெண். பிறந்து மூன்று நாளான பெண் குழந்தை அவள் பக்கத்தில் இருந்தது. ஒரு வருஷம் முடிவதற்குள்ளாகவே தன்னுடைய இன்ப வாழ்க்கை இருளடைந்து விடும் என்று அவள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

அவள் வாழ்க்கை மட்டுந்தானா இருண்டிருந்தது? அந்த நேரம் கூட ஒரே இருள் மயமாக இருந்தது. வானம் மேகங்களால் மூடப்பட்டு காரிருள் கவ்வியிருந்தது. வெளி

யுலகத்தின் இருள், மண்ணை வாரி முகத்தில் அறையும் பேய் காற்று, பக்கத்திலிருந்த திக்கற்ற குழந்தை, வயிற்றில் உண்டாகிய கொடும் பசி, வெறுக்கத்தக்க தனிமை, அவள் மனதை சஞ்சலத்தில் ஆழ்த்தியது. உலகத்திலிருந்து ஒதுக்கப்பட்டு தனிமையை அனுபவிக்கும் படி ஏற்பட்ட தன் நிலைமை நினைத்து அவளே தன்மேல் பரிதாபங் கொண்டாள். ஒரு பெருமூச்சு விட்டாள். அவள் மனத் திரையில் பத்து மாதங்களுக்கு முன்னால் நடந்த சம்பவம் தோன்றியது.

* * *

பத்து மாதங்களுக்கு முன்னால் அவள் உள்ளம் ஒரு விதமான துன்பத்தையும் அறியாததாக இருந்தது. அவள் தன் பெற்றோர்களுடன் கள்ளங் கபடமற்ற வாழ்க்கையையல்லவா நடத்தினாள்!

அவள் ஜீவனம் விறகு தேடி விற்பது. தினந்தோறும் பொழுது விடியு

முன்னே அவள் பழைய கஞ்சியைக் குடித்து விட்டு விறகு தேட அருகிலுள்ள காட்டுக்குச் சென்று விடுவாள். மாலை யானதும் சேகரித்த விறகுகளை தலைமீது சுமந்து நகரில் கொண்டு போய் விற்று அன்றாட போஜனத்துக்கு வேண்டிய அரிசி முதலிய சாமான்களை வாங்கி வருவாள்.

அன்றும் அவள் வழக்கம் போல் காட்டிற்குச் சென்றாள். ஆனால் அன்றுதான் அவள் வாழ்க்கையை மாற்றி அமைப்பதற் கென்று வந்த அவனைச் சந்தித்தாள். காலில் வெட்டுக் காயத்துடன் ஸ்மரணை இழந்து அவன் விழுந்து கிடந்தான். காயத்தில் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. அவன் பக்கத்தில் கோடாலி ஒன்று இருந்தது. அவளுக்கு இளகிய மனம் ஒன்று இருந்ததால் அவன் காயத்தை பச்சிலையால் சொஸ்தப் படுத்த வேண்டிய பொறுப்பு அவள் தலையில் விழுந்தது.

அவன் கண்ணைத் திறந்து அவளைப் பார்த்தான். அவனுடைய பார்வை அவன் மீது பரிதாபங் கொள்ளும்படி செய்தது. அவன் பக்கத்தில் அவள் உட்கார்ந்தாள். அன்புடன்தான் பேசினாள். அதற்கு முன்பு அவனை அவள் பார்த்தது கூட கிடையாது. அவனிடம் அன்பு கொண்டதற்குக் காரணம் அவளுக்கே விளங்கவில்லை.

"யேன் தயங்கறே? ஒன் ஊடு எங்கே இருக்கு? மெள்ள நடந்து ஊட்டுக்குப் போயிடேன்," என்றாள் அவள் கனிவுடன்.

"ஐயோ, அதை யேம்மா கேக்கறே? நான் அனாதை. இப்படி ஒழைச்சி கஞ்சி சாப்பிட்றது அந்த கடவுளுக்கு சம்மத மில்லே! வெறகு வெட்டப் போய் காலெ வெட்டிக்கினேன்! எனக்கு போக்கிடம் எது?" என்றான் அவன்.

"ஒனக்கு அப்பன் ஆத்தா ஊடு ஒன்னுமே இல்லையா?" என்று வருத்தத்துடன் கேட்டாள் அவள்.

அவன் 'இல்லே' என்பதின் அறிகுறியாக தலையை அசைத்தான்.

"ஒன்னைப் பார்த்தா பரிதாபமா இருக்கு! ஒன்னை கூட்டிகிட்டு யென் குடிசைக்கு போனா எங்கப்பன் எதினாச்சும் சொல்லும். அதான் பார்க்கறேன்!" என்றாள் அவள் ஒன்றும் தோன்றாதவளாய்.

"உம்,...ஒன் அப்பன் அவ்வளவு கெட்டவனா யிருந்தா வேணாம்மா..அங்கே யென்னை அழைச்சிகிட்டுப் போகாதே ......யென்னாலே ஒனக்கு கஷ்டம் என்னாத்துக்கு?"

"அப்பொ, ஒன் கதி யென்னவாம்?"

"யெங்கே போறது? இங்கேயே கிடக்கிறேன்."

"ராத்திரியிலே சிங்கம் எதிஞச்சும் அறைஞ்சுட்டா?"

"அப்படித்தான் பூட்டா என்ன? யென்னை யார் தேடப் போரு?"

அவனைத் தனியாக அங்கு விட்டுப் போக அவளுக்குப் பிரியமில்லை. தன்னுடன் அழைத்துப் போகவும் பயம். கொஞ்ச நேரம் யோசனையி லாழ்ந்தாள்.

"அண்ணே, அதோ பாரு! ஒரு கொகெ தெரிதே, அதிலேபோய் நீ பத்திரமா படுத்துக்கோ......ஒனக்கு காயம் சொஸ்தமாகற வரைக்கும் நான் கஞ்சி கொண்டாந்து வாக்கறேன்," என்ருள் அவள். அன்று அவள் அவனை அண்ணன் என்று தான் அழைத்தாள்.

* * *

குகையில் தன்னந் தனியே இருந்த அவனுக்கு வீட்டின் ஞாபகம் வந்தது. காலையில் அவனுக்கும் அவன் மனைவிக்கும் எவ்வளவு பெரிய சண்டை? வீட்டை விட்டு வரும் பொழுதே தன்னை மதிக்காத அவள் முகத்தில் விழிக்கக் கூடாதென்று சபதம் செய்து கொண்டு வந்தான்.

* * *

அவள் தன் சாப்பாட்டில் கொஞ்சம் மிச்சப் படுத்தி யாருக்கும் தெரியாமல் அவனுக்குத் தினந்தோறும் கொண்டு வந்தாள். காயம் மறைந்தது. அவன் பூரண சுகம் அடைந்தான். அவர்கள் உறவு பலப்பட்டது.

"ஏய், எத்தனை நாளுதான் ஒனக்கு கஷ்டம் கொடுத்துண்டு இருக்கிறது! இனிமே யென்னுலே வெறகு வெட்ட முடியும்! இனி நானே பொழைச்சுக்குவேன்'" என்ருன் அவன் திடீரென்று ஒரு நாள்.

"யென்ன இப்படி பேசறே? நீ இப்போ போயிட்டா யென்னை யெப்போ வந்து பாப்ப?" என்று கொஞ்சினுள் அவள்.

"யெப்போ யென்ன? தெனமும் வெறகு வெட்ட இங்கேதான் வருவேன். நீயும் இங்கே வந்துடு!" என்று சொல்லி பிரியா விடை பெற்றுச் சென்ருன்.

அவனும் அவளும் தினமும் சந்தித்தார்கள். கள்ளங் கபடமற்று பேசி சிரித்துக் கொண்டே விறகு வெட்டி வந்தார்கள். நான்கு மாதங்கள் பறந்தன.

அவள் உடல் மாறிக் கொண்டு வருவதை அவள் பெற்ருேர் கவனித்ததும் அவள் பேரில் சந்தேகங் கொண்டு அவளை கண்காணிக்க வாரம்பித்தார்கள். அவளால் அவனைச் சந்திக்க முடியாமல் போய்விட்டது.

அவன் பிரிவை அவளால் சகிக்க முடியவில்லை.

ஒரு நாள் இரவு அவள் குடிசையில் ஒரு ஆள் குறைந்து விட்டது. அவள் எவனுடனே ஓடி விட்டதாகப் பேசிக் கொண்டார்கள் அவள் பெற்றோர்.

உண்மையில் அவனும் அவளுமாகத்தான் ஓடி விட்டார்கள். இருவரும் காட்டின் வேறு ஒரு பாகத்தில் குடிசை கட்டி அதில் வாழ்ந்து வந்தார்கள்.

அவள் பூரண கர்ப்பிணியானள். விறகு வெட்ட அவளால் வெளியே போக சக்தியற்றவளானள்.

"யேன், ஒன்னைத்தான். நீ போய் வெறகு வெட்டிக்கினு வெளக்கேத்தறத்துக்குள்ளே வந்துடு. முன்ன மாதிரி காலை கீலை வெட்டிக்கினு விழுந்துடப் போறே!" என்று எச்சரித்து அவனைத் தனியே விறகு வெட்ட அனுப்பினள்.

இருட்டியும் அவன் குடிசை திரும்பவில்லை. நேரம் ஆக ஆக அவளுக்குப் பயமாக இருந்தது. அவள் கலவரமடைந்தாள். இரவு கழிந்து பொழுது விடிந்தது. முடிந்த வரையில் அவனைத் தேடினள். அவன் அகப்படவில்லை. சோர்வடைந்து குடிசைக்குத் திரும்பினள். அவன் வழி தெரியாமல் அலைந்து கொண்டிருப்பான் என்று நினைத்தாள். மறுநாளும் தேட வேண்டுமென்று எண்ணினள்.

ஆனல் அவள் வயிற்றில் இருந்த சிசுவுக்கு அவள் கவலையைக் கொஞ்சமும் தெரிந்து கொள்ளவில்லை. அன்றிரவே தான் இந்த உலகத்தைப் பார்க்க வேண்டுமென்று அவசரப்பட்டு அவளுடைய கவலைகளுக்கிடையே அது பிறந்தது. அவள் குழந்தையின் முகத்தைப் பார்த்தாள். அவனுடைய நினைவைத்தான் அது உண்டாக்கியது. இந்த நற்செய்தியை அவனுக்குத் தெரிவிக்கவேண்டுமென்று அவள் துடித்தாள்: அவன் எங்கே வரப்போகிறன். அவன் விறகு வெட்டச் சென்ற பொழுது அவனுடைய மாமனும் மச்சானும் அவனைப் பிடித்திழுத்துச் சென்றது அவளுக்கு எப்படித் தெரியப் போகிறது? அவன் இவளை மறந்துவிட்டு தன் பழைய மனைவியுடன் சந்தோஷமாக இருக்கிறன் என்பது அவளுக்கு யார் அறிவிக்கப் போகிறர்கள்? அவன் வருவான் வருவான் என்று எதிர்பார்த்து நான்கு நாள்களாகி விட்டன! பைத்தியக்காரி! அவள் ஆசை இன்னும் விடவில்லை. பெருமூச்சு விட்டு விட்டு இன்னும் அவனை எதிர்பார்க்கலாமா? அவன் வருவானு?



அளித்த பரிசு

வீ. குமாரஸ்வாமி

எனக்கு உடம்பில் ஒரே வியர்வை. நெல்லையப்பர் ஹைரோட்டில், அந்த மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு வியாபாரம் செய்து கொண்டிருந்த அந்த ஜீவன்களுக்கு அந்த சித்திரை மாதத்து வெயில் சுகமாக இருந்தது போலிருக்கிறது!

"ஏ, வெள்ளரிக்காய்க்காரி! அணுவுக்கு எத்தனை பிஞ்சு?"

"மூணு, எடுத்துக் கிடுங்க சாமி."

"அட பிள்ளை! சரிதான்; அஞ்சு தரியா?"

"என்னங்க, சாமி, எங்களுக்கு கட்ட வேண்டாமா?"

"ஏ! வள்ளி! ஐயாவுக்கு நாலு போட்டுக் கொடேன்" என்று பக்கத்திலுள்ளவன் சொல்லியவுடன், அவள் தலையை நிமிர்த்தி, "சாமி! எவ்வளவுக்குங்க வேணும்—சொல்லுங்க" என்றாள்.

ஒரு விதமாக பேரம் முடிந்து மூன்று அணுவுக்கு பிஞ்சிகள் வாங்கினேன்.

வாங்கின பிஞ்சுகளை, என் 'சைக்கிளில்' எங்கே வைத்துக் கட்டுவது?

"வள்ளி! ஒரு கயிறு கொடேன், கட்டுவதற்கு" என்றவுடன், ஏதோ உணர்ச்சி வந்தவள் போல, "என்ன சொன்னீங்க" என்றாள் பெருமிதத்தோடு.

அவள் பெயரைச் சொன்னதில் அவளுக்கு அவ்வளவு சந்தோஷம் போலும்! "ஆமா! நீ சொந்தத் தோட்டம் வச்சிருக்கிறாயா, இல்லே விலைக்கு வாங்கி விக்கிறாயா?" என்றேன் சிரித்துக் கொண்டே.

"சொந்த தோட்டந் தானுங்க" என்ருள் நாணம் கலந்த சிரிப்புடன்.

அவளேயே கண் கொட்டாது பார்த்தேன். கரு கரு வென்று சுருண்ட அழகிய கேசமும், கருமை பூத்த கண்களும், உருண்டு திரண்ட அவள் அங்கங்களும், என் இதயத்தை அப்படியே கவ்வின.

"வள்ளி! எங்க வீட்டிலே வெள்ளரிப் பிஞ்சுண்ணு ரொம்பப் பிடித்தம்: நீ, நாளே முதல், தினந்தோறும், ரெண்டு அணுவுக்கு வாடிக்கையாக் கொண்டு வரயா! எங்க வீடு, வீரராகவப் புரத்திலே, "தர்மகர்த்தா ஐயா" வீடுண்ணு, யாருக்கும் நல்லாத் தெரியும்! காலே காலேயிலே வரயா" என்று சொல்லி விட்டு என் சைக்கிளே ஓட்ட ஆரம்பித்தேன்.

2

மறு நாட்காலேயில் எங்கள் வீட்டிற்கு வள்ளி வந்தாள்.

"சாமி இருக்காங்களா?" என்ருள்.

"யாரடி அது? காலங்காத்தாலே வந்து தொந்தரவு பண்றது," என்ற என் மனேவியின் "திருக்குரல்" கேட்டு அரைத் தூக்கத்திலிருந்த நான் படுக்கையை விட்டெழுந்து, "வள்ளி கொண்டு வந்து விட்டாயே, பலே! பேஷ்! இங்கே இப்படி வை!" என்றேன்.

"ஆமாங்க! இதோ! பாருங்க" என்று சொல்லி ஒரு சிறு கூடை நிறைய கொண்டு வந்த பிஞ்சிகளேக் கீழே கொட்டினுள்.

"வள்ளி! இதுக்காக ரொம்ப சிரமப்பட்டாயோ?"

"இல்லே சாமி, நீங்க ரொம்ப ஆசை வச்சுக் கேட்டீங்க; அதனுலே, என்ன கஷ்டப் பட்டாச்சும் கொண்டு வரணுமின்னு நினேச்சு, பிரயத்தனப் பட்டேனுங்க" என்ருள்.

இதற்குள் என் மனேவி வந்து விட்டாள்.

"ஆமா! உங்களே, இவ்வளவு பிஞ்சுகளே யார் வாங்கச் சொன்னது?" என்று கூறி பத்ரகாளி ரூபம் எடுத்தாள்.

"ஐயா வூட்டுக்கு சும்மா தானுங்க கொண்டு வந்தேன் துட்டு ஒண்ணும் வேணுமுங்க" என்று சொல்லி, கூடையை மட்டும் தன் இடுப்பில் வைத்தவாறே திரும்பினுள்.

"வள்ளி, உன்னே இன்ஞெரு சமாசாரத்துக்குல்ல வரச் சொன்னேன். நீ, எங்கவீட்டுக்கு 'வேலே'க்கு வர முடியுமா? உனக்குப் பணம் மாதா மாதம் கிடைக்கும். நம்ப வீட்டு அம்மாவுக்கு அடிக்கடி உடம்பு சௌகரிய மில்லாமல் போயிடறது" என்று நான் சொல்லியதும், அவள் அப்படிண்ணு

எங்க ஆயாகிட்டே சம்மதம் கேட்டு வரேன்'' என்று சொல்லி விட்டு தன் அன்ன நடையைக் கட்டினுள்.

அவள் நடை அழகையேப் பார்த்துக் கொண்டிருந்த என்னை, அந்த இடி போன்ற குரல், மின்சாரத் தாக்குதல் போன்ற உணர்ச்சிக்கு ஆக்கியது.

''நல்லாயிருக்கு! ஆம்பிளேங்க லக்ஷணம்'' என்ற வார்த்தைகள் அவளிடமிருந்து வந்தால் நான் வீட்டிற்குள் செல்லாமலிருக்க முடியுமா?

3

சரியாக ஒருமாத காலமாகி விட்டது வள்ளி எங்கள் வீட்டு வேலேக்கு வந்து. என் பரிபூரண அன்பு, வள்ளியிடம் பட்டிருப்பது ஆண்டவன் ஒருவனுக்குத்தான் தெரிந்திருக்கும் என நினேத்தேன். ஆனுலும் என்ன கெட்டகாலமோ, 'அவளுக்கு'க் கூட அந்த சந்தர்ப்பத்தில் தெரிந்து விட்டது.

ஒரு நாள் என் மனைவி தண்ணீர் எடுக்க கொல்லேப் பக்கம் சென்றிருந்தாள். அப்போது தற்செயலாக வள்ளி வாசல் பக்கம் தலே நீட்டினுள்.

ஏ! வள்ளி, சும்மா வாயேன், இப்படி. ஒருத்தரும் இல்லே; என்ன வெட்கப் படுகிருயே ''என்று சொல்லி அவளேப் பார்த்து ஒரு புன் முறுவல் பூத்தேன்.

''அம்மா......வீட்டிற்குள் ......'' என்ருள் தழுதழுத்த குரலில். அந்த சொற்களில் வெட்கம்—நடுக்கம் தொனித்தன.

''சும்மா! இந்தப் பக்கம் வாயேன்'' என்று சொல்லி என்னேயும் அறியாமல் அவள் கையைப் பற்றி இழுத்தேன்.

''விடுங்கோ! சாமி எனக்கு வெக்கமா இருக்குது'' என்று சொல்லி என் பிடியை உதற முயற்சித்தாள்.

அந்தச் சமயத்தில் அவள் கையிலிருந்த ''வளேயல்'' ஒன்று என் கைகளில் சிக்கி விட்டது. அவளுக்குத் தெரியாமல் அப்படியே ''ஜோபியில்'' போட்டுக் கொண்டேன்.

எங்கள் ''லீலேகளே''க் கண்டு விட்டாள் ''அவள்.''

தன்னேயறியாமல், குடத்தை நழுவ விட்டவுடன், அது விழுந்த சப்தம் என் இதயத்திலே ''டக்'' கென்று அடித்தது.

''தேவடியாள், எங்கேடி வந்து உன் கை வரிசையைக் காட்றது! நாளேயிலிருந்து எங்கள் வீட்டுக்கே வேண்டாம் தொலேடி'' என்ருள்.

எனக்கோ ஒன்றுமே புரிய வில்லை; ஒருவாறாக, அவளைச் சமாதானப் படுத்தினேன். வள்ளியும் அன்று முதல் எங்கள் வீட்டுப் பக்கம் வர வேயில்லை: எனக்கு ஒரு மாதிரியாக இருந்தது.

4

நாலைந்து மாதங்கள் நடந்திருக்கும்; எங்கள் நிலத்துக்கு குத்தகை எடுத்த "ராமாயி" வந்தாள். நில விஷயங்களையெல்லாம் பேசி முடித்தவுடன், என்னிடம் "சாமி என் புள்ளைக்கு கலியாணமுங்க! உங்க கையினாலே ஏதாவது..." என்றாள்.

"உனக்கு, புள்ளை வேறு இருக்கிறதா?"

"ஆமாங்க! நான் இது வரையில் உங்க வூட்டுக்கு அழைச்சு வந்ததே இல்லிங்க" என்று சொல்லி விட்டு "ஏ வள்ளி! இங்கே வாயேன்! என்னடி வெக்கப் படுறே; ஐயாவுக் கிட்ட உனக்காக......" என்று கூப்பிட்டாள்.

என் மனதில் "சுருக்" கென்றது; பழைய "வள்ளி" என்றாலும், எனக்கு ஒரு பக்கம் ஆச்சரியம்; ஒரு பக்கம் திகைப்பு! அவளும் வந்தாள்.

வெட்கம் போலும்! என்னைப் பார்த்து, ஒரு குறும்புச் சிரிப்புச் சிரித்தாள்.

உள்ளே சென்றேன். எனது வள்ளிக்காக ஒரு சங்கிலியும், பழைய வளையலும் கொண்டு வந்து, "வள்ளிக்கு பொருத்தமானது இந்த சங்கிலி, இது அதிர்ஷ்டக்கார வளையல்" என்று வளையலை மாத்திரம் சுட்டிக் காட்டி அவளைப் பார்த்தேன்.

அவள் என்னைத் திரும்பிப் பார்த்த பார்வை, "ஐயா! என்னை மறந்து விடாமல் என் வளையலை மாத்திரம் வைச்சிருக்கிங்களே" என்பது போல இருந்தது.

வழிப்போக்கன்: என் கால் மீது காரை ஏற்றிவிட்டாயே! எனக்கு நூறு ரூபாயாவது நஷ்டஈடு கொடுத்தால்தான் விடுவேன்!

கார் டிரைவர்: நான் ஒன்றும் கோடீஸ்வரன் அல்ல, உனக்கு நூறு ரூபாய் கொடுப்பதற்கு!

வழிப்போக்கன்: நான் ஒன்றும் மரவட்டையல்ல!

இது சென்னை

சினிமாவுக்குப் போனால் இடம் கிடைக்கவில்லை; பஸ்ஸில் இடம் கிடைக்கவில்லை; ஹோட்டலுக்கு டிபன் சாப்பிட போனால் இடம் கிடைக்காமல் தவம் செய்ய வேண்டியிருக்கிறது. டிராம் வண்டியும் இதே கதிதான். குடியிருக்க இடம் கிடைக்கவில்லை. கோலாகலங்களுக்கு இடையில் கலாசாலைகளிலும் பள்ளிக்கூடங்களிலும் இடங் கிடைப்பதில்லை என்பதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பள்ளிக்கூடத்தில் இடங் கிடைத்துப் படித்துப் பாஸ் செய்துவிட்டால் கலாசாலைப் படிப்புக்கு முற்றுகை தொடங்க வேண்டியிருக்கிறது.

கல்வி விஷயத்தில் பாரபக்ஷம் காட்டுவது மிகவும் வருந்தத்தக்க விஷயம். கலாசாலை டிரஸ்டிகளுக்கோ டிரஸ்டிகளுக்கு வேண்டியவர்களுக்கோ ஒருவர் வேண்டியவராக இருக்க வேண்டியது; அவ்வளவுதான். அவர் பிள்ளையை கலாசாலையில் சேர்ப்பது பற்றிக் கவலையே கிடையாது. பையனுக்கு மார்க்கு நிறைய வேண்டுமே என்று கவலைப்பட வேண்டிய அவசியமும் இல்லை.

வேண்டியவர் வேண்டாதவர் என்ற வித்தியாசம் சென்னையில் எத்தனையோ வருஷங்களாகப் பிரசித்தி பெற்றுக் கல்வித் துறையில் முன்னணியில் நிற்கும் ஒரு கல்லூரியிலேயே காட்டப்படுகிறது என்றால் அது எவ்வளவு வருந்தத்தக்க விஷயம்.

கலாசாலைப் படிப்புக்கு ஏற்றவன் என்று கருதப்படும் மாணவனுக்கு எல்லா விஷயங்களிலும் இவ்வளவு மார்க்கு இருக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்வது மிகவும் நியாயமானது. ஆனால் அது நடை முறையில் மிகவும் மோசமான நிலைமையில் இருக்கிறது. வேண்டியவர் சிபாரிசைப் பெற்றவனாகவும், பெரிய மனிதர்களுக்கு வேண்டியவனாகவும் இருந்து விட்டால் இந்த மார்க்கு விஷயம் அடிபட்டுப் போய்விடுகிறது.

இது மிகவும் மோசமானது; கீழ்த்தரமானது. இதை அடியோடு ஒழிக்க முயல வேண்டும். நாகரிகம் முதிர்ந்த இந்த நாளில் கல்விக்கு ஏற்படும் இவ்வித அர்த்தமற்ற தடைகள் நாட்டின் கௌரவத்தையே குலைப்பதாகும்.

திரு. வி. க.

(திரு. வி. க. வைப்பற்றி பல பத்திரிகைகளின் அபிப்பிராயங்கள்)

மூன்று மாத காலமாக அம்பலத்தில் இருந்த சாதுத் தமிழ் கலியாண சுந்தர முதலியாரை வீட்டுக்குள்ளே வைத்து விடுதலையளித்த (!) சென்னை சர்க்காருக்கு நன்றி பாராட்டுகிறோம்.

இனி அவர் தம்முடைய தமிழ்த் தொண்டைத் தொடர்ந்து நடத்தக் கூடுமல்லவா? — வெள்ளி மணி

* * *

கடவுள் மீது பாரத்தைப் போட்டு திரு. வி. க. இந்தப் போராட்டத்திலிருந்து விலகியிருந்தால் தொழிலாளர் இவ்வளவு பாதாளத்திற்கு வந்திருக்க மாட்டார்கள்.

— சிவாஜி

* * *

திரு. வி. க. அவர்கள் முப்பது வருஷத்துக்கு முன்னால் "தேச பக்தன்" ஆரம்பித்த காலத்திலிருந்து அரசியல் உலகிலும் முன்னணியில் நின்று வந்தும் சிறைப்படாமலே தப்பித்து வந்திருக்கிறார்.

இப்போது அவருடைய பழைய சகாக்களான டாக்டர் ராஜன், டாக்டர் சுப்பராயன் இவர்களால் சிறைக்கு அனுப்பப்படும் சிறப்பைப் பெற போகிறாரோ, என்னமோ? — கல்கி

* * *

வள்ளுவரின் வழித் தோன்றல்; கம்பனின் இளவல்; தமிழ் நாட்டு டால்ஸ்டாய். தொழிலாளர் புரட்சியும் அகிம்சை நெறியும் ஒருங்குறும் வழியைக் கண்டவர் — திரு. வி. க. தமிழ் நாடு தந்த வீரர் — தமிழர் கண்ட சான்றோர் திரு. வி. க.

— தமிழ் முரசு

* * *

திரு. வி. க. தன்னுடைய தள்ளாத வயதில், 14,000 தொழிலாளரும் அவருடைய குடுபத்தினரும் மூன்று மாதங்களாகப் பட்டினி கிடக்கும் நேரத்தில், அவர்களுடைய வேலை நிறுத்தத்திற்குத் தலைமை தாங்கி, சூரியப்பிரகாச ராவ் போன்ற கருங்காலிகளுக்கும் இடங் கொடுக்காமல் திறமையுடன் வேலை நிறுத்தத்தை நடத்தி வரும் அறிஞர். — தாய் நாடு

* * *

தொழிலாளரை ஒன்றுபடுத்துவதும், தொழிலாளர் இயக்கங்களை நடத்திச் செல்லுவதும் எப்படி என்பதை நான் தங்களுக்குச் சொல்லத் தேவையில்லை. கடந்த 100 நாள் அனுபவத்தில் பல அரிய உண்மைகளைத் தாங்களே கண்டு கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். — தமிழ் மணி

கிருஷ்ண பட்சத்துச் சந்திரன்

(மு. துரைராஜா)

என் நண்பர் பத்திரிகாசிரியர் ஒருமுறை எழுதி இருந்தார். 'அடுத்த இதழுக்கு உள்ளத்தை உருக்கும் சோகம் நிறைந்த ஒரு காதற் கதையாக எழுதி யனுப்புங்கள்' என்று.

முதலில் என்ன கதை எழுதுவதென்று திகைத்தேன். பின்பு உள்ளத்தின் சம்மதத்தின் பேரில் என் கடந்த கால வாழ்க்கையையே ஒரு கதையாக எழுதி யனுப்பினல்—என்று நினைக்கும்போது என் கண்முன் என் கதைகளைப் படித்து மகிழும் ரசிகர்கள் காட்சியளித்தனர். நான் எழுதப்போகும் கதையைப் பற்றி நிச்சயம் என் நண்பர்களில் இரண்டொருவராவது புகழ்ந்து எழுதுவார்கள். ஒவ்வொருவரும் 'தங்கள் கதை' அல்லது 'தங்கள் கற்பனை' என்பதை அவசியம் குறிப்பிடுவார்கள். ஆனல் ஒருவராவது, அது என் வாழ்க்கை வீணையின் தந்தி யொன்றிலிருந்து எழுந்த சோக கீதம் என்பதைசற்றும்சிந்திக்கவே மாட்டார்கள் என்று நினைக்கும்போது என் உள்ளத்தில் சிறிது விரக்தி ஏற்பட்டது.

கனவின் கனிவை, கற்பனையின் சொற் சித்திரத்தை, சொப்பனத்தின் சுகுமாரத் தன்மையை அறிய முடியாத இவ்வற்பப் புவனம், மனித்த மனத்தின் அடியிலே புதைந்துள்ள அபிலாஷைகளை—சிதறியச் சிந்தனைகளைப்பற்றி கிஞ்சித்தேனும் சிந்திக்க முற்படுமா!

இன்று ஐந்தாம் முறையாக அக்கதையை எழுத முனைந்தேன். ஒவ்வொரு முறையும் எழுத முற்படும்போது கைகள் எழுத இயலாதபடி நடுக்கமுறும். அல்லது என்ன எழுதினேன் என்று மறுபடியும் படிக்க முடியாதபடி கண்களில் நீர் தேங்கிவிடும். இக்கத் தடுமாற்றத்துக்கும் அர்த்தமில்லாமலில்லை. சித்தத்தைத் திடப்படுத்திக்கொண்டு சிந்தனைகளைத் திரட்டி ஒருவாறு என் ஜீவியக் கதையை எழுத்தோவியமாகச் சமைக்க முற்பட்டேன்.

* * *

வசந்தத்து வனப்பும் இளமையின் எழிலும் வாழ்வின் வைகறையோடு போட்டிப்

போட்ட மணப் பருவத்து நாட்கள் அவை.

நான் ராதையை மணந்து சில வருடங்களுக்குப் பிறகு தான் அவளுடையப் பெண்மையின் மென்மையை—மேன்மையை உணர்ந்தேன். அவள் ஒரு குக்கிராமத்து எளிய உபாத்தியாயரின் புதல்விதான். நான் நினைத்ததுண்டு—'வாழ்வுக்காகப் போராடும் இந்த எளிய உபாத்தியாயரின்சாதாரணப் பட்டிக்காட்டுப் பெண்ணோடு வாழ்க்கையைக் கடத்த வேண்டி இருக்கிறதே' என்று. ஆனல் என்னோடு அவளை—இல்லை அவளோடு என்னை வாழ்க்கையில் சேர்த்துப் பிணைத்த பிறகுதான் என்னுடைய புகழ்—வாழ்வின் இன்பம்—லட்சியம் இன்னும் கூறப்போனல் என் தற்போதையப் புகழ்ச்சியின் ஏணி அவள்தான். கீட்ஸ், ஷேக்ஸ்பியர், மில்டன் முதலிய மேனட்டுக் கவிகளின் கவிதைகளைப் போற்றிப் புகழ்ந்த என்னை, நம் செந்தமிழ் நாட்டுக் கம்பர், இளங்கோ, திருவள்ளுவர் இவர்களின் கவிதை இன்பத்தை எனக்கு ஊட்டியவள் ராதை தான்.

என் உத்தியோக நேரந் தவிர மற்ற வேளைகளில் அவள்தான் என் நண்பன்—துணைவி எல்லாம். ஒரு வாக்கியத்தில் கூற முடியுமானல், மனிதஉருவத்தில் நடமாடும் பெண் தெய்வம் அவள். எங்களின் வாழ்வின் இன்பத்துக்கு நாளுக்கு நாள் தேய்ந்து கொண்டே வரும் சந்திரனை யல்ல உவமை கூறுவது. என்றும் சிரஞ்சீவித் தன்மை வாய்ந்த வெய்யோனைத்தான் கூறவேண்டும்.

இயற்கை இன்பத்தை ரசிப்பதில், இயற்கையின் மென்மையான அணைப்பில் லயித்துக் கிடப்பதில் எனக்கு அலாதி ஆனந்தம். நடுச்சாமத்தில் அமைதியான வான வெளியில் உதயமாகும் கிருஷ்ணபட்சத்துச் சந்திரனையும், செழுமையானக் காட்டாற்றங் கரையில் முகிழ்த்து முறுவல் செய்யும் கார்காலத்து முல்லை மலர்களையும், வானத்தினின்று இழிந்து வரும் அருவியின் அழகையும் வளமை நிறைந்தும் பசுமை பரவிய வயற்புறங்களையும் என் ராதையுடன் கைகோர்த்துக் கன்னத்துடன் கன்னம் பொருந்த நேரம் போவதே தெரியாமல் ரசிப்பதில் எனக்கு அலாதி இன்பம்.

எங்கள் அன்பின் பிணைப்பைக் கண்டு மௌனப் புன்னகையுடன் மூன்று சித்திரை மாதங்கள் விரைவில் சென்று விட்டன. ராதையும் ஒரு பெண் மகவுக்குத் தாயானள்.

ஆனால் இதுவரை எவ்வளவுக் கெவ்வளவு தாய்மையை விரும்பித் தவித்தாளோ அவ் வளவுக்கவ்வளவு குழந்தை பிறந்தபோது அதை வெறுத் தாள். என்—தன்னையே— தன் வாழ்வையே சபித்தாள் என்றும் கூறலாம். வாழ்வின் வனப்புகளைப் பார்த்து மகி ழாதபடி தான் எட்டிப் பார்த்த புதுஉலகத்தின் புது மைகளைக் காணமுடியாதபடி இறைவன் அக் குழந்தையின் கண்பார்வையைப் பிடுங்கி விட்டான்.

'சகிக்க முடியாதத் துன் பம்' என்பார்களே அதை என் வாழ்வில் முதலாக அக் குழந்தையைக் கண்டதுந் தான் உணர்ந்தேன். தங்க விக்ரகம் போன்று துள்ளி விளையாடும் துடி துடிப்பானக் குழந்தை. ஆனால் அதன் கண்பார்வையைப்பற்றி எண் ணும் போது எந்தத் தந்தை தான் தன் வாழ்வின் முதற் குழந்தை பிறவிக் குருடாக இருப்பதைப்பற்றி மனம் சகிப்பான். என் வாழ்வின் சூரியனே அஸ்தமித்துவிட் டது போல் எனக்குப் பட் டது. ராதை, தன்விதியையும் கடவுளையும் சபித்து மனம் விண்டு போனாள்.

கற்பனைக்குக் கூட எட்டா தச் சம்பவங்கள் வாழ்க்கை யில் நிகழ்வதுண்டு. அந்தக் குருட்டுக் குழந்தையே என் ராதையின் உயிருக்கு எமனாக வாய்த்தது. இரண்டு வருடங் களுக்குப் பிறகு நீண்டகால மனநோயின் அவஸ்தையி னால் ராதை, அத்குழந்தையை என் கையில் ஒப்படைத்து விட்டு இந்த அற்ப உலகத்தை விட்டே மறைந்து சென்று விட்டாள். இன்பத்தைத் தேடிச்செல்லும் என் போன்ற யுவனுக்கு வாழ்வில் இதைவிடத் துன்பம் என்ன வேண்டி இருக்கிறது! துன் பத்தின் சிகரத்தை அடைந்து விட்டேன் நான். என்னதான் சொல்ல வேண்டும். உயிருக் குயிரான—உலகத்தின் இன் பங்களை என் கண்களைத் திறந்துகாட்டிய என் ராதை என்னைத் தனியே விட்டுச் சென்று விட்டாள். வாழ்வின் ஒவ்வொரு கணமும் என்னைத் துன்புறுத்த என் ராதையே மறுபிறவி எடுத்ததுபோல் தன் குழந்தையை என்னிடம் விட்டுச் சென்று விட்டாள்.

காலப்போக்கின் மாறுதல் களுக்கிடையே வருடங்கள் எட்டும் மறைந்தோடி விட் டன. வாழ்வில் குறுக்கிடும் வீணர்களின் வம்புப் பேச் சும், என் தந்தையின் என்னு டைய மறுமணத்தைப் பற் றியத் தொந்தரவும் என் வை ராக்கியத்தை அசைக்க முடி யாமல் பின்தங்கி விட்டன. மறுமணம் என்று எண்ணும் போது எனக்கு தற்கொலை என்னும் பொருள்தான் கண் முன் நிற்கின்றது. ராதைக்

காக ராதையின் நினைவுச் சின்னமாகிய அக்குழந்தைக் காக என் வாழ்வையே அர்ப் பணித்து விட்டேன். ராதை யெனும் என் செல்வக் குழந்தை, தன் குமுதவாயால் 'அப்பா' என்று எனை அழைக்குந் தோறும் என் ராதையின் மனோரதம்—என் வாழ்வின் லட்சியம் நிறை வேறிவிட்டதாக எனக்குத் தோன்றும். தென்றல் தவழ்ந்து செல்லும் மாடி வெளியில் அமர்ந்து துன்புற்ற இவ்வுலகத்தின் தாழ்வை வெறுத்து என் குழந்தை ராதையின் மனம் வீணையின் நாதத்துடன் இழைந்து விட்டால் அந்த மலர் மடந்தை கலைவாணியின் உருவல்ல என் உயிர்த் துணைவி ராதைதான் அக்கலைவாணியின் உருவில் அமர்ந்து இருப்பது போன்ற வீண் பிரமைத் தட்டும் எனக்கு.

என் இளம் பிராயத்தில் இன்பத்தின் சிகரத்தை எட் டிப் பிடிக்க முயன்ற பருவத் தில், தங்கப் பொடி தூவியது போன்ற வெண் மணலில் பனி நிலவு பொழியும் அமைதி யான இரவு வேளைகளில் ராதையுடன் ஆனந்தமாகக் கைகோர்த்துச் செல்லும் போது யாராகிலும், 'உலகம் துன்பமே நிறைந்தது; துன் பத்தை அநுபவிப்பதற்காகத் தான் மனிதன் உலகில் பிறக் கிறான்' என்று சொல்லி இருந்தால், 'யாரோ பைத்தி யக்காரன் உளறுகிறான்' என்று பதில் உரைத்திருப் பேன். ஆனால் இப்போது அந்த கசப்பான உண்மையை எண்ணும்போது 'போதும்— இந்தப் பிறவி போதும்— இனிமேல் மனிதப் பிற வியே வேண்டாம்' என்று தோன்றுகிறது.

என் புதல்வி ராதையின் எதிர்கால அந்தகாரத்தை அவ ளின் மணப்பருவத்து நாட் களை நினைந்து மனம் புழுங் கும்போது, 'இறைவ! என் உயிரையே வேண்டுமானா லும் உம் காலடியில் அர்ப் பணித்து விடுகிறேன். அவ ளின் பார்வையைத் திருப்பிக் கொடுத்துவிடு, என்று எத் தனை இரவுகள் தனிமையில் குழந்தைபோன்று அழுதிருக் கின்றேன். கடவுளுக்குக் கண் இல்லை என்பது என் மட்டில் உண்மையாயிற்று.

ராதையின் எதிர்காலத்தை எண்ணுந் தோறும் என் உள் ளம் சுக்கு நூறாக உடைந்து போவது போன்ற உணர்ச்சி ஏற்படுகின்றதே! என் வாழ்க் கைச் சூரியன் மறைந்து விட்டது; இனி எஞ்சி இருப் பது தேயுந்திங்களும், ஒளி இழந்த வான வெளியும்; தூயத்துறவி போன்ற எனக்கு இவைகளால் என்ன மனச்சாந்தி ஏற்படப் போகின்றது!

காலம் யாருக்கும் காத் திருப்பதில்லை. தன் பாட்டுக்கு

உருண்டு கொண்டே சென்றது. காலை மூன்று மணி இருக்கும். இரவு பூராவும் மன அமைதி இல்லாது உறக்கமில்லை. மேஜைமேல் பிரித்துக் கிடந்த ஒரு புத்தகத்தை எடுத்து வாசித்தேன். அதிலிருந்த,

'The fond scene can charm
mine eyes no more; for
Thou art gone; and I am
left below
to struggle in this world
of woe.'

எனும் இரண்டு வரிகள் என் துயருற்ற வாழ்வையே பிரதிபலித்தன. புத்தகத்தை மார்பின்மீது சாய்த்துக் கொண்டு சிந்தனையில் அமிழ்ந்து விட்டேன். அடுத்த அறையினின்று கிளம்பியக் கீதம்—வீணையின் மெல்லியக் கீதம் என் இதயத்தைத்தன்பால் இழுத்தது. என் ராதையின் அறையை எட்டிப் பார்த்தேன். படுத்துக் கொண்டே அரைத்தூக்கத்தில் வீணையை மீட்டிக்கொண்டிருந்தாள் ராதை.

மாடிக்கு வந்து வெளி உலகை வெறித்துப் பார்த்தேன். எங்கும் அமைதியாக இருந்தது. கிருஷ்ண பட்சத்துச் சந்திரன் அர்த்த வடிவத்தில் சோபையற்று உதயமாகிக் கொண்டிருந்தது. என் தேயும் வாழ்க்கையையும் கிருஷ்ணபட்சத்துச் சந்திரனுக்கு என் உவமையாகக் கூறக்கூடாது!



ஜ்வாலா

(வாரப்பதிப்பு)

[ஆசிரியர்: வே. விசுவ நாதன்; 39, ஆண்டர்சன் தெரு, ஜி. டி. சென்னை: தனிப் பிரதி: விலை அணா 3.]

அரசியலில் அழுத்தமான அபிப்பிராயமும் கட்டுரைகளில் காரசாரமும் கதைகளில் சுவாரஸ்யமும் கொண்டு மிளிர்கிறது 'ஜ்வாலா.'

'இந்த வாரம் எப்படி?' என்னும் ஜோஸ்யப் பகுதியைத்தவிர, 'சபாஷ் சவுக்கடி' என்னும் ரஸமான கடிதப் பகுதியும், 'அடி சக்கை' என்னும் துக்கடாப் பகுதியும், 'ருசி எப்படி?' என்னும் புத்தக விமர்சனப் பகுதியும் சிறந்து விளங்குகின்றன.

தேசம் முழுவதும் 'ஜ்வாலா' ஜ்வலித்துச் சமூக சேவை செய்ய வேண்டும் என்பது எங்கள் விருப்பம்.

* * *

ஏழு பேர்

[ஆசிரியர்: க. நா. சுப்ரமண்யம். கிடைக்குமிடம்: சூறாவளி புத்தகங்கள், வேப்பேரி, சென்னை 7.]

"அவள் விழுந்தது பற்றிப் பலருக்குச் சந்தோஷமே! ஆனால் சிலருக்கு மட்டும், "ஐயோ பாவம்!" என்று இருந்தது.

அவள் உதவி கேட்டுக் கெஞ்சிய போது கை கொடுத்து உதவ அந்தச் சிலருக்கும்கூட மனத் தெம்பு கிடையாது. உலகம் என்ன சொல்லுமோ எனப் பயந்தார்கள். மீண்டும் அவள் சும்மா இருப்பாளா என்று தீர்மாணிக்க முடியாமல் திணறினார்கள்.

சீர்திருத்தம், பிரசாரம் எல்லாம் பேசி என்ன பயன்? ரத்தம் துடிக்கும் மனிதர்கள் முன்னிலையில்......!"

இந்தச் சீர்த்திருத்த விஷயத்தை மிகவும் அழகாக விளக்கியிருக்கிறார் ஆசிரியர். சீர்திருத்தத்தைச் செயல்

கைதி: (ஜெயில் வார்டனிடம்) என்னுடைய சட்டை ஒன்று காணாமல் போய் விட்டது. இங்குகூட திருடர்கள் இருக்கிறார்களே!

முறையில் ஆதரிக்காத வாய்ப் பேச்சு வீரர்களுக்கு இந்நூல் சரியான சவுக்கடி.

மேலும் ஆத்திரத்துடன் தாக்காமல் விஷயத்தைக் கதையில் புகுத்தி ரஸமாய்ச் சொல்லும் முறை பாராட்டத் தக்கது என்பதில் ஐயமில்லை.

*　　　*　　　*

சந்திரோதயம்

[ஆசிரியர் : பி. கே. முத்துசாமி ; காரியாலயம், 20, ஹால்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை ; தனிப் பிரதி விலை : அணா 3. வருஷ சந்தா : ரூ. 5.]

புதிய பத்திரிகைகள் எவ்வளவோ வருகின்றன, போகின்றன. ஆனால் ஒரு பழைய பத்திரிகை புதிய நிர்வாகத்தின் கீழ் புதிய அம்சங்களுடன் நடப்பது என்பது மிகவும் சிரமமான காரியம்தான். அதுவும் "சந்திரோதயம்" பல பேர் கைபட்டு ஒரு நிரந்தரமான அந்தஸ்தைப் பெற முடியாத நிலையிலேயே இருந்தது. அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் பதவியை ஏற்று நிர்வகிப்பது ரொம்ப ரொம்ப சிரமம்.

பழைய "சந்திரோதயத்" தின் புதிய ஆசிரியர், பழைய பி. கே. முத்துசாமி தான். அவருக்குப் பத்திரிகை யுலகத்தில் நல்ல அநுபவம் உண்டு. பல வருஷம் தன்னந் தனியாகப் பத்திரிகை நடத்திய பெருமையும் உண்டு ; எந்த விஷயத்தையும் தெளிவாகவும், ரஸமாகவும் எழுதும் திறமையும் உண்டு ; பத்திரிகையின் தலையங்கம் எழுதுவதிலிருந்து அந்தப் பத்திரிகையைத் தபாலில் சேர்க்கிற வரையில் எல்லா வேலைகளையும் தாமே செய்யக் கூடியவர் அவர். நன்றாகக் கதைகள், கட்டுரைகள், விமர்சனங்கள் எல்லாம் எழுதுவார். இவ்வளவு திறமை வாய்ந்தவரை ஆசிரியராகக் கொண்ட பத்திரிகை வெற்றி யடையும என்பதில் சந்தேகம் என்ன இருக்கிறது.



மனைவி : (புருஷனிடம் சந்தேகம் கொண்டவள்) உங்கள் டயரியில் ஒவ்வொரு பக்கத்திலும் க. தெ. 20 ரூபாய், 30 ரூபாய் என்று எழுதி இருக்கிறீர்களே, எவள் அந்த க. தெ. என்பது?

புருஷன் : 'கடவுளுக்குத் தான் தெரியும்' என்பது அர்த்தம். மறந்துபோன செலவுகளை அப்படி எழுதுகிறேன்.

தமிழ் நாடும் சினிமாக் கலையும்

[ஆக்கியோன்: "செங்கு", செங்கு பதிப்பகம், ஏழு கிணறு, சென்னை; விலை அ. 0-6-0.]

"தமிழர் எக் கலையில் சிறந்து விளங்க வில்லை? சங்கீதத்தில் சம்பன்னராக விளங்கவில்லையா? நாட்டியத்தில் நற்கியாதி யடைய வில்லையா? நாடகத்தில்தான் நிபுணராகத் திகழவில்லையா? சிற்பத்தில் தான் சீர்பெற்று விளங்க வில்லையா? இத்தகைய கலைஞர்களாகிய நம் தமிழர்களா இன்று சினிமாக் கலை சீரழிந்து கிடப்பதைக் கண்டு சகித்திருப்பது?"

என்று இந் நூலாசிரியரின் உள்ளம் குமுறியதாம்; உடல் துடி துடித்ததாம். அதன்மேல் இந்த நூலை எழுதி யிருக்கிறார். சினிமா நடிகர்களின் செவியிலும் பட முதலாளிகள் செவியிலும் இந்த நூலின் கூக்குரல் விழுந்தால் நல்லதுதான்.

* * *

Burmah Shell News

விரைவாகச் செல்லும் மோட்டார் முதலிய இயந்திரங்களுக்கு பர்மா ஷெல் கம்பெனி எத்தகைய சேவை செய்து வருகிறது என்பது மிகப் பிரசித்தம். அந்தக் கம்பெனியார் இந்தச் செய்தித் தொகுதியை வெளியிட்டிருக்கின்றனர். கம்பெனியில் வேலை பார்க்கும் ஊழியர்களுக்குப் பொழுது போக்காக இருக்கட்டும் என்பதுதான்நோக்கமாம். ராம் கோபால் நடனக்காட்சி, புராதன புராண சிவா மாளிகை முதலிய படங்கள் நன்றாயிருக்கின்றன. இந்திய நடனத்தை பற்றிய கட்டுரை மிகவும் சிறப்பா யமைந்திருக்கிறது.

பாதிரி: மோக்ஷம் அடைவதற்கான வழிகளைச் சொல்லி விட்டேன். உங்களில் எத்தனை பேர் மோக்ஷத்துக்குப் போக விரும்புகிறீர்கள், எழுந்திருங்கள். (ஒருவரைத் தவிர மற்றவர்கள் எழுந்து நின்றார்கள்.)

பாதிரி: (உட்கார்ந்திருப்பவரைப் பார்த்து) ஏனப்பா! உனக்கு மோக்ஷம் போகப் பிரிய மில்லையா?

உட்கார்ந்திருப்பவர்: இப்பொழுது போகப் பிரியமில்லை. இன்னும் கொஞ்ச காலம் உயிருடனிருக்கலாம் என்று உத்தேசம்.

அழகு

(மதிப்பாசிரியர் : இராம மீனாட்சி சுந்தரனார், ஆசிரியர் : என். பழனியப்பன் (அறிவழகன்) அழகு அலுவலகம், 289, தம்புச் செட்டித் தெரு, சென்னை. தனிப் பிரதி அணா 4 வருட சந்தா ரூ 3

புதிதாக ஆரம்பிக்கப் பட்டுள்ள மாதப் பத்திரிகைகளில் இதுவும் ஒன்று. நாவலர் ச. சோ. பாரதியார் அவர்களின் 'குடியாட்சிக் கொடுமைகள்' என்ற கட்டுரையில் தமிழர் உயர்வதற் குரிய கருத்துகள் இல்லை. பெ. தூரன் அவர்களின் 'பூக்காரி' எம். எஸ். கமலாவின் 'அவள் மனம் போல்' என். பழநியப்பன் அவர்களின் 'தொலைந்தாள் அவள்', முதலியவர்களுடைய விஷய தானங்கள் நன்றாக இருக்கின்றன. திருச்சி ரேடியோவின் 'கவி யரங்கம்' போலவே அழகில் 'பாவலர் மன்றம்' என்னும் பகுதியில் தொழிலாளியைப் பற்றி பல கவிஞர்களின் கருத்துக்களை வெளியிட்டிருப்பது இப் பத்திரிகையின் சிறப்பு வெளிப்படுகிறது.

அண்ணாதுரை அவர்களின் படமும் தமிழரின் கொடியும் அட்டையில் இருப்பது அழகுக்கு அழகு செய்வது போலிருக்கிறது.

அம்புலி மாமா

(ஆசிரியர்; ராஜ சூடாமணி. கிடைக்குமிடம் : 37, ஆசாரப்பன் தெரு, சென்னை. தனிப் பிரதி அணா. 6.)

குழந்தைகளுக் கேற்ற நல்ல பத்திரிகைகள் நிறைய இல்லையே என்ற கவலையைப் போக்கி விட்டது அம்புலி மாமா. சுவாரஸ்யமான சின்னஞ் சிறு கதைகள், மூளைக்கு வேலை, வேடிக்கைச் சித்திரங்கள், பல வர்ணப் படங்கள், எல்லாம் நிறைந்த இந்தப் பத்திரிகையை சிறுவர்கள் விரும்புவதில் ஆச்சரியமில்லை. பெற்றோர்கள் இப் பத்திரிகைக்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்து தங்கள் குழந்தைகளின் அறிவை வளரச் செய்வார்கள் என்பது நன்கு புலப்படுகிறது.

சிறுவன் : எங்கம்மா கொஞ்சம் மாதிரி துணி வாங்கி வரச் சொன்னாங்க!

துணி கடைக்காரன் : எந்த நிறத்திலே, என்ன துணி வாங்கி வரச் சொன்னாங்க? விறகு கார்டு இருக்கா?

சிறுவன் : எதுவாயிருந்தாலும் பரவாயில்லே! விளக்கு சிம்னி துடைப்பதற்குதானே!

அதிசயந்தான்!

"எஸ்ஸெஸ்"

தில்லைநாயகத்தின் புகழ் எல்லை கடந்து பரவிக் கிடந்தது. அவர் எழுதும் கதைகளையும் கட்டுரைகளையும் படிக்கவேண்டுமென்று மக்கள் காத்துக் கிடந்தனர். சேர்ந்தாற் போல் சில வாரங்கள் அவர் கட்டுரையோ கதையோ வெளி வரவில்லை யென்றால் அந்த வாசகர்களுகல்லாம் பைத்தியம் பிடித்தமாதிரி இருக்கும்.

இப்படி மாபெருங்கீர்த்தியுடன் விளங்கிய தில்லைநாயகத்துக்கு ஒரு சமயம் பல்வலி வந்து விட்டது.

தில்லைநாயகம் எவ்வளவோ பொறுமையுடன் பல்லைக் கடித்துக் கொண்டு இருந்து பார்த்தார். ஒன்றும் பலிக்கவில்லை. கடைசியில் ஒரு பல் வைத்தியரிடம் காட்டி உபத்திரவம் தரும் இரண்டு பற்களையும் பிடுங்கி விடும்படி சொன்னார்.

பல் வைத்தியர் அந்த இரண்டு பற்களையும் பிடுங்கி விட்டார். எடுத்த பற்களை எறிந்து விடாமல் அவர் பத்திரப்படுத்தி வைத்ததைப் பார்த்த தில்லைநாயகத்துக்கு அதிசயம் தாங்க முடியவில்லை.

"என்ன டாக்டர் ஸார்! என் பற்களைப் பத்திரப்படுத்தி வைக்கிறீர்களே, எதற்காக?"

"சரியாய்ப் போயிற்று! உங்கள் பெருமை உங்களுக்குத் தெரியாது. பிரபல எழுத்தாளர் தில்லைநாயகத்தின் பல் என்று கூறினால் யாரும் என்ன விலை கொடுத்தும் வாங்கி விடுவார்கள்!"

இதைக் கேட்ட தில்லைநாயகம் ஆச்சரியத்துடன் வீடு திரும்பினார்.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு தில்லை நாயகத்துக்கு அந்தப் பல் வைத்தியரைப் பற்றிய ஞாபகம் வந்தது. தம் பற்கள் விற்றிருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும் என்று ஒரு ஆசையும் தோன்றியது. உடனே அவரிடம் சென்றார்.

"டாக்டர் ஸார்! என் பற்கள் இரண்டும் விற்று விட்டனவா? எந்தப் பிரகஸ்பதி அவைகளை வாங்கினான்?" என்று கேட்டார் தில்லை நாயகம்.

"ஸார், இதுவரையிற் இரண்டு லட்சம் பற்கள் விற்றிருக்கின்றன!"

"என்ன? இரண்டு லட்சம் பற்களா? மனிதனுக்குப் பற்களே முப்பத்திரண்டு தானே?"

"அதை யார் ஸார் கவனிக்கிறார்கள்? தில்லைநாயகத்தின் பல் என்றால் ஜனங்கள் ஓயாமல் கேட்கிறார்கள். என்னிடம் வந்த மற்ற எல்லா பற்களையும் உங்களுடையது என்று சொல்லி விற்று விட்டேன்!"

பல் வைத்தியரின் இந்த பதில் தில்லை நாயகத்தைத் திகைக்க வைத்து விட்டது.

நண்பர்கள் சங்கம்

(பதினாறு வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியர்களுக்கு மட்டும்)

அன்பு மிக்க சிறுவர் சிறுமியர்களுக்கு,

இது பதினாறு வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியர்களுக்காக ஏற்படுத்தப் பட்டுள்ள சங்கம். பல விடங்களிலிருக்கும் சிறுவர் சிறுமிகள் ஒருவரையொருவர் அறிந்து கொள்வதற்கும், அவர்களுக்கிடையே கடிதப் போக்கு வரவு ஏற்படுத்திக் கொள்வதும் இந்தச் சங்கத்தின் முக்கிய நோக்கமாகும். சங்கத்தின் அங்கத்தினர்கள் ஒருவருக்கொருவர் கடிதங்கள் எழுதிக் கொள்ளலாம். ஆனால் முதல் கடிதம் மட்டும் சச்சு மாமி வழியாக எழுத வேண்டும். நீங்கள் எழுத விரும்பும் நண்பர்கள் விலாசம் முழுவதையும் ஒவ்வொருதரமும் பத்திரிகையில் பிரசுரிக்க இயலாது. ஆகையால் முதல் கடிதத்தை பெயர்......c/o சச்சு மாமி, பாசராசு, 45-46, அரமணைக்காரத் தெரு, சென்னை 1 என்று விலாசமிட்டு எழுதவும். இப்படி என்னிடம் வரும் முதல் கடிதங்களை உங்கள் நண்பர்களுக்கு அனுப்புவேன். உங்கள் நண்பர்கள் உங்களுக்கு நேராக பதில் எழுதுவார்கள். அவர்கள் விலாசத்தையும் உங்களுக்குத் தெரிவிப்பார்கள். பிறகு நீங்கள் நேராக ஒருவருக்கொருவர் கடிதங்கள் எழுதிக் கொள்ளலாம். அறிவை விருத்தி செய்து கொள்ளும் விதத்தில் கல்வியைப் பற்றியோ, ஒரு கலையைப் பற்றியோ, அல்லது பொது விஷயங்களைப் பற்றியோ உங்கள் அபிப்பிராயங்களையும், அபிப்பிராய பேதங்களையும் எது

தாயார்: ராமு, நீ மருந்து சாப்பிடுவதற்கு வெகுமதியாக எட்டணா கொடுத்தேனே, என்ன செய்தாய்?

ராமு: நாலணாவுக்கு மிட்டாய் வாங்கி சாப்பிட்டேன். மீதி நாலணாவை என் மருந்தை சாப்பிட்ட என் தம்பிக்கு கொடுத்து விட்டேன்.

வேண்டுமானாலும் எழுதலாம். நீங்கள் ஒருவருக்கொருவர் பலவூர் தபால் தலைகள், நாணயங்கள், படங்கள், புத்தகங்கள், முதலியவற்றை மாற்றிக் கொள்ளலாம்.

நீங்கள் எப்படிப் பட்டவர்களுடன் என்ன விஷயங்களைப் பற்றிக் கடிதப் போக்கு வரத்து வைத்துக் கொள்ள விரும்புகிறீர்கள் போன்ற விவரங்கள் வெளியாகும். இதனால் உங்களுக்கு வேண்டிய நண்பர்களைத் தெரிந் தெடுத்துக் கொள்ளுவது சுலபமாகும்.

பையனைக் கேள்வி மேல் கேள்வி கேட்டார் உபாத்தியாயர். பையன் சரியான பதில்களை சொல்லிக் கொண்டு வந்தான். பையனை எப்படியாவது திணர வைக்க வேண்டுமென்று நினைத்தார் உபாத்தியாயர்.

உபாத்தியாயர்: அசோகர் பட்டத்துக்கு வந்ததும் முதல் வேலையாக என்ன செய்தார்?

பையன்: சிம்மாசனத்தில் உட்கார்ந்தார்.

புதிய அங்கத்தினர்களின் பெயர்கள் அவ்வப்போது பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

ஒவ்வொரு மாதமும் போட்டிப் பந்தயங்களுண்டு. இவைகளுக்குப் பிரவேசக் கட்டணம் கிடையாது. ஆனால் அங்கத்தினர்கள் மட்டும் இவைகளில் பங்கெடுத்துக் கொள்ளலாம்.

அங்கத்தினர்கள் எழுதும் கட்டுரைகள், சிறு கதைகள் முதலியவை பொருத்தமுடையனவா யிருந்தால் இப் பக்கங்களில் பிரசுரிக்கப்படும்.

மேலே சொன்ன முறைகளில் உங்கள் அறிவு விருத்தியடையவும் தமிழ் மொழி வளரவும் வேண்டிய சாதனங்கள் ஏற்படவே இச் சங்கம் நிறுவப் பட்டது.

அங்கத்தினர்கள் சங்கத்திற்குச் செலுத்த வேண்டிய சந்தா ஆறு மாதத்திற்கு 8 அணா. வருஷத்திற்கு ஒரு ரூபாய். அங்கத்தினராக விரும்புவோர் கூபனைப் பூர்த்தி செய்து சாந்தாவுடன் சச்சு மாமி, c/o பாரசு, 45-46, அரமனைக்காரத் தெரு, சென்னை 1, என்னும் விலாசத்திற்கு அனுப்ப வேண்டும்.

தங்கள் அன்பிற்குரிய,

சச்சு மாமி.

ஸ்டேஜ் & ஸ்க்ரீன்

(வாரப் பத்திரிகை)

சென்னையில் நடக்கும் சினிமா, நாடகம், சங்கீதக் கச்சேரிகள், முதலியவைகளைப் பற்றி முன்னதாக அறிவிக்கும் சிறந்த வாரப் பத்திரிகை.

32 பக்கங்கள். விலை அணு இரண்டு

வருட சந்தா ரூ. 6-0-0

சென்னை வாசிகளுக்கு மட்டும்

பாசரசு காரியாலயம்

45-46 அரண்மனைக்காரத் தெரு

சென்னை 1

நண்பர்கள் சங்கம்

C/o. பாசரசு, சென்னை. 1

பெயர்..

பிறந்த தேதி..

தகப்பனார் பெயர்..

தகப்பனார் தொழில்..

விலாசம்..

....

....

அங்கத்தினர் கையெழுத்து..

பெற்றோர் கையெழுத்து..

லேகியம் எங்கே?

ஸ்ரீமதி ராஜம் நரசிம்மன்

மாலை ஏழு மணி இருக்கும். ரகு ஆபீஸிலிருந்து வீட்டுக்கு வந்தான். உள்ளே 'ஹரிகேன் லைட்' மினுக் மினுக் கென்று எரிந்து கொண்டிருந்தது. கூடத்தில் படுத்திருந்த பார்வதி தலையை தூக்கி பார்த்துவிட்டு "யாரு, ரகுவா, ஏண்டாப்பா சாயந்திரம் டிபனுக்கு வரவில்லை?" என்று கேட்டாள்.

"ஆபீஸிலே வேலை அதிகமாயிருந்தது. வரமுடியல்லை. என்ன டிபன் இன்னிக்கி?"

"ஹல்வா வேணும்னு சொன்னையே, அதான் பண்ணினேன்...அப்ப, தலை வலி, எழுந்து உட்காரக்கூட முடியல்லையே. சரஸ்வம் கோவிலுக்குப் போனவள், இன்னும் திரும்பி வரல்லை. சரி, கமலா உள்ளே இருக்காள், போ" என்ருள் பார்வதி தீராப் பொறியாக. ரகுவின் உள்ளம் இக்கடைசி வாக்யத்தை கேட்டதும் ஒரு முறை துள்ளிக் குதித்தது. இம்மாதிரி சந்தர்ப்பத்தை வேண்டித்தானே அவனும் இந்த ஒருவார காலமாக தபசு செய்து வந்திருக்கிருன். தனக்கு சகாயம் புரியும் பொருட்டு தன் தாயாரை வருத்த வந்த தலை வலியை மனமார வாழ்த்திக் கொண்டே சமையலறையை நோக்கிச் சென்ருன்.

ரகு கமலாவை மணந்து பத்து நாட்கள் தானுகிறது. மறு அழைப்பு செய்ய பார்வதி நாட்டுப் பெண்ணை தன்னுடன் அழைத்து வந்தாள். கல்யாணம் ஆன புதிசு! அதுவும் இளம் தம்பதிகள்! எப்படி எப்படியோ இருக்க வேண்டுமென்று ஆசை கொள்வது சகஜம் தானே? பார்வதியோ சுத்த கர்நாடகம். போதாக் குறைக்கு ரகுவின் தமக்கை பிரஸவத்திற்காக பிறந்தகம் வந்திருக்கிருள். கமலா ரேழியிலோ, புழக்கடையிலோ தனியாயிருப்பதை அறிந்து அவன் திருடனைப் போல சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே அவள் அருகில் நெருங்கிப் போய் அவளை பிடிக்க முயற்சிப்பான். பூஜை வேளையில் கரடி வந்தது போல அந்த சமயத்தில் பார்வதியோ, சரஸுவோ வந்து விடுவார்கள். அவர்களை தனக்குள் சபித்துக் கொண்டே ரகு மெள்ள நழுவி விடுவான். அங்கிருந்து, இந்த ஒரு வாரமாக இதே 'தொல்லைதான்'. இந்நிலைமையில் கமலாவை தனியாக சந்திக்கப் போவது

பற்றி அவன் குதூகலம் கொள்வது சகஜம்தானே.

கமலா உள்ளே ஏதோ வேலையில் ஈடுபட்டிருந்தாள். ரகு பூனை போல நடந்து போய் அவளுடைய கைகளை பிடித்துக் கொண்டான். திடுக்கிட்டுப் போன கமலா, "உஸ்...யாராவது பார்த்து விடப் போகிறார்கள்" என்றாள்.

"பயப்படாதே. சரஸு கோவிலுக்குப் போனவள் திரும்பி வரவேஇல்லை. அம்மாவுக்கோ தலை வலி, எழுந்து உட்காரக்கூட முடியல்லையாம்."

"சரி கையை விடுங்கோ, ஹல்வா எடுத்து தரேன்."

"நீதான் எனக்கு ஹல்வா. அடாடா, எத்தனை இனிப்பாய் இருக்கு தெரியுமா?"

கமலாவின் முகம் நாணத்தால் 'கப் என' சிவந்தது. மெதுவாக தன்னை விடுவித்துக் கொண்டு, அலமாரியிலிருந்து ஒரு கிண்ணத்தை எடுத்து வந்து, அவன் முன் வைத்தாள்.

"ஊஹூம். நீயும் என் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, ஹல்வாவை என் வாயில் எடுத்துப் போட்டால்தான் தின்பேன்" என்றான் ரகு.

ரகுவிற்குள்ள ஆசைகள் கமலாவுக்கு இல்லையா? அவளும் இத்தகைய இன்பத்தை நாடித்தானே ஏங்கிக்கொண்டிருக்கிறாள்? அவன் விரும்பியபடியே செய்து கொண்டு "எப்படி இருக்கு" என்று வினவினாள்.

"எது?" என்று கேட்டான் ரகு அவளை அணைத்த வண்ணம்.

* * *

மறு நாள் காலை எட்டு மணி இருக்கும். ஏதொ இடி முழக்கம் கேட்டு ரகு திடுக்கிட்டு கண் விழித்தான். பார்வதி வேலைக்காரியை உரத்த குரலில் திட்டிக் கொண்டிருந்தாள். "மரியாதையா உண்மையைச் சொல்லி விடு

விபத்தா?

ஒரு ரெயில்வே அதிகாரி ஸ்டேஷன் மாஸ்டர் ஒருவரைப் பார்த்து, "இந்த ஸ்டேஷனில் எந்த விபத்து ஏற்பட்டாலும் உடனுக்குடன் தந்தி மூலம் எனக்கு அறிவிக்க வேண்டும்," என்று எச்சரித்தார்.

அதிகாரிக்கு ஒரு நாள் பின் வருமாறு தந்தி வந்தது.

"பிளாட் பாரத்திலிருந்த ஒரு மனிதன் ஓடிக்கொண்டிருந்த என்ஜின் முன் விழுந்து விட்டான். மீதி பின் தந்தியில் அறிவிக்கப் படும்."

கொஞ்ச நேரத்திற் கெல்லாம் இன்னொரு தந்தி வந்தது. "விழுந்தவனுக்கு அடிபடவில்லை. என்ஜின் பின்னுக்குச் சென்று கொண்டிருந்தது."

லேகியத்தை நீ தானே திருடினவள்?"

"சத்தியமா சொல்றேன், நான் இல்லேம்மா."

"பொய் பேசறாயா? உன்னைத் தவிர வேறே எவனடி திருடி யிருக்க முடியும்?"

"எந்த லேகியம், எனக்காக இரண்டு நாளுக்கு முன் கிளறினாயே, அதுவாம்மா?" என்று கேட்ட வண்ணம் சரஸு அவ்விடம் வந்தாள்.

"ஆமாம். அது செய்யற போதே தனக்கு கொஞ்சம் வேணும்னு இவள் கேட்டாள். நான் கொடுக்க முடியாதுன்னு சொல்லி விட்டேன். அதை திருடிக் கொண்டு போய் விட்டாள், சண்டாளி?"

"அநியாயமா என் மேலே பழி சொல்லாதீங்கம்மா."

"சீ நாயே, வாய்வேறேயா? இந்த மாசம் சம்பளம் உனக்கு இல்லை. அதோடே, நீ வேலைக்கும் வேண்டாம், போ" என்று சீறினாள் பார்வதி. அம்மாளுடைய ருத்ர காளி ஸ்வரூபத்தைக் கண்டு நடுங்கிப் போய் அழுத வண்ணம் அவ்விடம் விட்டகன்றாள் வேலைக்காரி.

அன்று மாலை ரகு கமலாவை ரேழியில் தனியாக சந்திக்க நேர்ந்தது. "ராத்திரி ஹல்வாவுக்கு பதிலாக அலமாரியில் அதற்குப் பக்கத்திலிருந்த லேகியத்தை எடுத்து உங்களுக்கு கொடுத்து விட்டேன் ஞாபகப் பிசகாக. நீங்கள் ருசி வித்யாசம் கூட கண்டு கொள்ள வில்லையே" என்றாள் கமலா.

"அதுதான் ராத்திரி யெல்லாம் தூக்கமே இல்லை. வயிற்றில் ஏக புரட்டல். ரொம்ப கஷ்டமாய்ப் போச்சு. அதை திங்கறபோது உன் மாதிரி தான் எனக்கும் ஞாபகம் பிசகி இருந்தது. அதிருக்கட்டும், அம்மாவுக்குத் தெரியுமா?"

"நல்ல வேளை, காலமே எல்லாருக்கு மின்னே வழக்கம் போல நான் எழுந்தேன். அலமாரியை திறந்து பார்த்த போது, ஹல்வா கிண்ணம் வைத்தது வைத்தபடியே இருக்கு. கீழே லேகியக் கிண்ணம் காலியா இருக்கு. உடனே ஹல்வாவை கொண்டு போய் கிணற்றில் கொட்டி விட்டேன்."

"நல்ல வேலை செய்தாய், போ. இல்லாட்டா மானம் போயிருக்கும். பாவம், நம்மாலே வேலைக்காரிக்குத் தான் நஷ்டம். இந்த மாசத்து சம்பளத்தையும் அம்மா பிடிச்சுண்டுட்டாள். வேலையும் போச்சு."

"அதான் என் மனசும் கஷ்டப்படறது. விஷயத்தை வெளியில் சொன்னாலோ, வெட்கக் கேடுதான்" என்றாள் கமலா.

யாரோ வரும் காலடி ஓசை கேட்கவே தம்பதிகள் பிரிந்து உட்கார்ந்தனர்.

ஆயுள்தண்டனை

க.நா. சுப்ரமண்யம்

அவன் விடுதலையையும் வேண்டவில்லை. சிறையையும் வேண்டவில்லைதான். ஆனால் இரண்டும் எப்படியோ அவனுக்கு லபித்து விட்டன. இரண்டும் அவனுக்கு மிகவும் அசௌகரியமான சமயத்தில் லபித்து விட்டன.

அன்று காலையில் ஒன்பது மணிக்கு படைபடைக்கிற வெய்யிலில் சிறைக் கதவைத் திறந்து அவனை வெளியேற்றி விட்டார்கள். எப்படிக் கிடைத்தது இந்த விடுதலை என்றுகூட அவனுக்குத் தெளிவாகத் தெரியாது. ஏதோ அரைகுறையாகக் காதில் விழுந்தது தான்.

கொலைக் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்போலீஸார் வந்தபோது எவ்வளவு ஆச்சரியத்தில் மூழ்கினானோ அவ்வளவு ஆச்சரியத்தில் மூழ்கினான் கதிர்வேலு தன் விடுதலை பற்றியும். கூடக் கொலைக் குற்றம் சாட்டப்பட்டுக் கூண்டில் நின்றவர்கள் பெரிய மனிதர்கள்—ஒருவர் பெரிய பாங்கர்—ஒருவர் பெரிய மிராசுதார்—ஒருவர் பெரிய கடை முதலாளி. ஆறாவது குற்றவாளியான பாஸ்கர முதலிகூடத் தன்னைவிடப் பெரிய மனிதன் தான் என்பதைக் கதிர்வேலு உணர்ந்தான். அவனுக்கு ஒரு வெற்றிலை பாக்குக் கடையாவது இருந்தது—கதிர்வேலுவுக்கு என்ன இருந்தது?

கதிர்வேலு அதில் ஏழாவது குற்றவாளி.

தான் குற்றம் சாட்டப்பட்டதையும், தன்னைப் பற்றிய சர்க்கார் தரப்பு சாக்ஷியங்களையும், ஏதோ மூன்றாவது ஒரு மனிதனைப் பற்றிய சமாசாரங்களைக் கவனிப்பது போலக் கவனித்தான் கதிர்வேலு. கொலை செய்யவோ, கொலை செய்யச் சதி செய்த

வர்களுடனே சேரக் கதிர் வேலுவுக்குப் பிரமேயமே இல்லைதான். ஆனால் போலீஸாரும் மற்றவர்களும் எப்படியோ அவனையும இழுத்து விட்டார்கள். அவர்களுடைய சாமர்த்தியத்தை வியந்தான் கதிர்வேலு.

வியப்புக்குப் புறம்பாகப் பயம் என்று எதுவும்தோன்றவில்லை அவனுக்கு. உற்றார் உறவினர் யாரையும் விட்டுப் பிரிவது பற்றிக் கவலை கொள்ளவில்லை அவன்—உற்றார் உறவினரை விட்டு அவன் பிரிந்து—தானாகவே பிரிந்து, பரஸ்பர நன்மையை விரும்பிப் பிரிந்து பல வருஷங்களாகி விட்டன. கல்யாணம் செய்துகொள்ள வேண்டிய அவசியமும் ஏற்படவில்லை அவனுக்கு. ஒரு மிலிடேரி ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு, சூளையில், ஒரு இருளடர்ந்த வீதியில் ஒரு வீட்டுத் திண்ணையில் படுத்துறங்கி இரவுகளைக் கழித்து விட்டு மூட்டை யடித்தும் மற்றப்படி கிடைத்த வேலைகளைச் செய்து கொண்டும் காலங் கடத்திக் கொண்டு வந்த கதிர்வேலுவை, கொலை நடந்த அன்று சாயங்காலம் கொலை நடந்த இடத்துக்குச் சமீபத்தில் யாரோ பார்த்ததாகக் கூறியதே போதிய சாக்ஷியம் என்று கைது செய்து விட்டார்கள். சாக்ஷியம் போதுமோ போதாதோ என்றுகூட கதிர்வேலு கவலைப்படவில்லை. சந்தர்ப்ப, ஜாதக விசேஷங்களால், சாக்ஷியம் போதும் என்று ஜூரியும் தீர்ப்பளித்துவிட்டது. குற்றம் சாட்டப்பட்ட மற்ற அறுவருடன், ஏழாவது ஆசாமியாகக் கதிர்வேலுவுக்கும் கருணை மிகுந்த ஒரு நீதிபதியால் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

பாங்கர் சார்பாகவும், மிராசுதார் சார்பாகவும், கடை முதலாளி சார்பாகவும் அப்பீல்கள் பறந்தன. பாங்கர் சார்பில் வக்காலத்து வாங்கிய வக்கீல் கதிர்வேலுவை மறந்து விடாமல் அவனுக்கும் என்று அப்பீல் தொடுத்தார். இரண்டரை வருஷங்களுக்குப் பிறகு அப்பீல் வெற்றி பெற்றது.

பாங்கரும், மிராசுதாரும், கடை முதலாளியும் விடுதலை பெற்ற சமாசாரம் தினசரிப் பத்திரிகைகளில் அடிபட்டது. அவர்களுடைய உறவினர்களும் அன்பர்களும் நண்பர்களும் சிறை வாசலில் கார்களில் வந்து, ஜே கோஷங்கள் வானைப் பிளக்க மாலைகள் சூட்டி, ஊர்வலமாகக் காரில் அழைத்துச் சென்றார்கள்.

சிறை வாசல் வரையில் அவர்கள் மூவருடனும் தான் கதிர்வேலுவும் வந்தான். சிறை வாசலுக்கு வெளியே

அவன் வழியும், நடக்கவேண்டிய விதமும் மாறுபட்டது.

இந்த மாறுபாடு நியாயமானது தான் என்று கதிர்வேலுவும் உணர்ந்தான். அவர்கள் கார்களில் போவதும் சரிதான்—தான் வெய்யில் கால் சுட, தலை சுட, மேலே யிருந்த துண்டைத் தலையில் போட்டுக் கொண்டு நடப்பதும் சரிதான். ஆனல் மேலே யோசிக்கும் போது தான் கதிர்வேலுவுக்குப் பக்கென்றது. அவர்களுக்கு வீடிருந்தது, வாசலிருந்தது, உற்றார் உறவினர் பெண்டிர் சுற்றமென்றிருந்தது. பொருள் இருந்தது. மேலே எங்கே போவது, என்ன செய்வது என்று அவர்களுக்கு நிச்சயமாகத் தெரிந்தது. ஆனல் கதிர்வேலு...

கதிர்வேலு கொலைக் குற்றம் செய்தது கிடையாது என்பது என்னவோ உண்மை தான். தன் சிறைவாசத்துக்குக் காரணமான அந்தக் கொலையுண்டவனை அவன் கண்டதுமில்லை—போலீசார் வந்து கைது செய்யும் வரையில், அவனைப் பற்றிக் கேள்விப்பட்டதுமில்லை.

ஆனல் கதிர்வேலு ஒரு கலைஞன். ஜேபடித் திருட்டில் அவனுக்கீடு சொல்ல சென்னையிலேயே ஆசாமி கிடையாது என்கிற விஷயம் போலீசாருக்குக் கூடத் தெரியாது. அவ்வளவு பெரிய கலைஞன். அடுத்த பொழுதுச் சாப்பாட்டுக்குத் தன் கலையைத் தவிர வேறு எதை அவன் நம்பியிருக்க முடியும்?

2

ஒரு லக்ஷியம்

இரண்டரை வருஷங்களில் தன் கலைத்திறன் ஓரளவாவது பாதிக்கப்படாமல் இருந்திருக்க முடியுமா என்பது கதிர்வேலுவுக்கே சந்தேகமாகத்தான் இருந்தது. கைத்திறனைப் பரீக்ஷித்துப் பார்க்கும் வரையில் எதுவும் திடமாகச் சொல்வதற்கில்லை என்றுதான் எண்ணினன் அவன்.

கதிர்வேலுவுக்குத் தன்னம்பிக்கைக்குக் குறைவில்லை என்றுதான் சொல்லவேண்டும். சிறைவாசலைத் திறந்து விடுதலை செய்து வெளியே விட்டு விட்டது என்னவோ உண்மைதான். ஆனல் போலீசார் இனிக் கதிர்வேலுவைக் கவனிப்பார்கள் என்பது கஷ்டமான காரியமே! சென்னையில் ஏழு வருஷங்கள் எப்படியோ போலீஸார் கண்ணில் படாமலே காலந்தள்ளி விட்டவன் அவன். இனி அவ்வளவு சுலபமாக அப்படிக் காலந்தள்ள முடியாது என்பது உண்மை. ஆனல் அதற்காகவெல்லாம் அதைரியமடைந்து விடுவதாக உத்தேசிக்கவில்லை அவன்.

தைரியத்துக்கு அவசியமும் இருந்தது. தனக்கு சிறைத் தண்டனை ஊர்ஜிதமானவுடனேயே கதிர்வேலு ஒரு விஷயத்தில் ஒரு தீர்மானத்துக்கு வந்திருந்தான். அதாவது கடவுள் புண்யத்தில் தான் எப்படியாவது சிறையிலிருந்து வெளியே வந்து விட்டால், அந்தக் கொலையைச் செய்த உண்மைக் குற்றவாளியைக்கண்டு பிடித்து விடுவது என்று சிறையில் இருக்கும்போது தீர்மானித்திருந்தான் அவன். ஆத்திரத்தில், அநியாயமாக சிறைப்பட்டு விட்ட ஒரு ஆத்திரத்தில் விளைந்த ஒரு தீர்மானம் அல்ல இது. யாரையும் வஞ்சம் தீர்த்துக் கொள்ளும் உத்தேசத்துடனும் அவன் இப்படித் தீர்மானிக்கவில்லை. உலகத்தில் நியாயம் என்று ஒன்று உண்டு—அதை ஸ்தாபிக்கக் கடவுள்—போலீஸும் நியாயஸ்தலமும் போதாது என்று அவனுக்குத் தெரியும்—உதவுவார், என்கிற தத்துவார்த்தமான பரீக்ஷையை அவன் செய்து பார்த்து விடுவது என்று எண்ணினான். வருஷம் ஆக ஆக அந்தக் கொலைத் தடயங்கள் மறைந்து விடும்; மாறி விடும். ஆனால் கொலையாளி மட்டும் உயிருடனிருப்பானேயானால் எதுவும் மாறவில்லை என்று வைத்துக் கொள்ளலாம்.

இது சிறை புகுந்த முதல் வாரத்தில் கதிர்வேலு செய்து கொண்ட தீர்மானம். அதற்குப் பிறகு அவன் தன் தீர்மானத்தைப் பற்றி எண்ணியும் பார்க்கவில்லை. சிறைக்கதவு திறக்கும்போது மறுபடி ஞாபகப்படுத்திக் கொண்டால் போதும் என்கிற நினைப்புத்தான் அவனுக்கு. இப்பொழுது சிறைக் கதவு திறந்து இரண்டு மணி நேரம் கழித்துத் தான் கதிர்வேலுவுக்குத் தன் தீர்மானம் ஞாபகம் வந்தது.

அந்தக் கொலையைப் பற்றிய துப்பைத் துலக்க அவன் போலீஸ் உதவியை நாடலாம். போலீஸ் தருவது உதவியாகவும் இருக்கலாம்—இடைஞ்சலாகவும் இருக்கலாம். ஒரு நிமிஷத்துச் சிந்தனைக்குப் பிறகு

இடைஞ்சலாகத்தான் இருக்கும் என்கிற முடிவுக்கு வந்தான் கதிர்வேலு.

யாருடைய உதவியையும் எதிர்பாராமல், யார் செய்யக்கூடிய இடைஞ்சல்களையும் பொருட்படுத்தாமல், தன் தீர்மானத்தை நிறைவேற்ற முடியும், நிறைவேற்றியே தீருவது என்ற முடிவுக்கு வந்தான் கதிர்வேலு. முதலில் செலவுக்குப் பணம் வேண்டும். இரண்டாவதாகத் தங்க இடம் வேண்டும். மூன்றாவதாக அந்தக் கொலையைப்பற்றிய பழைய ரிகார்டுகளெல்லாம் வேண்டும்.

தான் படித்திருந்த துப்பறியும் நாவல்களுக்கெல்லாம் பிரயோசனம் இதோ ஏற்பட்டு விடப் போகிறது என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான்.

3

ஒரு நாள் செலவுக்கு

செலவுக்குப் பணம்— தங்குவதற்கு இடம். முதல் ஐடத்தைத் தொடர்ந்து இரண்டாவது ஐடம் சுலபமாகவே கிடைத்து விடும். முதல் ஐடம்?—கையில் தான் வித்தையிருந்ததே, கவலைப் படுவானேன்?

சென்னையில் காலை ஒன்பதரை பத்து மணிக்கு, ஐம்பது பேராவது கூட்டம் கூடுகிற இடம் எது என்று யோசித்தான் கதிர்வேலு. சாதாரண நாட்களானால், கூட்டத்தைத் தேடியிருக்க மாட்டான். மூன்று வருஷங்களாகப் பழகாத கையாயிற்றே என்றுதான் யோசித்தான். தன்னம்பிக்



கைக்கு அதிகமாக இடம் தந்துவிட்டு மாட்டிக் கொண்டு அவஸ்தைப் படத் தயாராக இல்லை அவன்.

சைனபஜாரை நோக்கி நடந்து கொண்டிருந்தவன், திரும்பினான். சென்டிரல் ஸ்டேஷனை நோக்கி நடந்தான். கீழே கால் சுட்டது. ஹாபாரத்துச் சட்டைப் பையில் காலி மணிபர்ஸ் கனத்தது. ஒரு மலிவுப் பேனாவின் கறுத்த கிளிப், சட்டையின் பழுப்பு நிறத்தை எடுத்துக் காட்டியது. துண்டைத் தலையில் போட்டபடியே நடந்தான். அதிகாலையில் கடைசித் தடவையாக சிறைக்கஞ்சி சாப்பிட்டதுதான், பதினொரு மணி வேளைக்கு, மூன்று வருஷப் பழக்க வேகத்தால் பசி வயிற்றைக் கிள்ளும்.

இந்த நேரத்துக்கு, காலையில் பத்து மணி சுமாருக்கு சென்டிரல் ஸ்டேஷனில் கூட்டம் இராது என்பது கதிர்வேலுவுக்கும் தெரியும். சென்டிரல் போன பிறகு வேறு பக்கம் திரும்புவது பற்றி யோசிக்கலாம் என்று எண்ணியவனாக நடந்தான்.

கால்சுடத்தான் சுட்டது. பாய்க்கடையிலிருந்து தங்க சாலைத் தெரு போக ஒரு குறுக்குச் சந்து தென்பட்டது. அதில் வெய்யலில்லை, நிழலாக இருந்தது என்கிற காரணத்தால் அதில் திரும்பினான் கதிர்வேலு. அதிர்ஷ்ட தேவதையும் அவனைப் பின் தொடர்ந்தாள்.

எதிரில் வேகமாக ஓடி வந்த மனிதனை கதிர்வேலு முதலில் கவனிக்க வில்லை. அவன் தன்மேல் மோதிக் கொண்டு சற்று நிதானித்து நகர்ந்தபோதும்கூடக் கவனிக்க வில்லை ஆனால் அவன் அப்படி மோதிய விநாடியே தன் பையில் கனத்த காலி பர்ஸ் பையிலிருந்து எதிரில் வந்தவன் கைக்கு மாறியதை உணர்ந்ததும் தான் அவனைக் கவனிக்கத் தொடங்கினான் கதிர்வேலு. இடது கையால் ஓடி வந்தவனின் வலது கையை இருகப் பிடித்துக் கொண்டான். வலது கையை மூடிக்கொண்டு அவன் முக வாய்க்கட்டையில் ஒரு குத்து விட்டான். ஓடி வந்தவனின் கண்கள் ஒளி மிழந்தன. தள்ளாடிக் கீழே உட்கார்ந்து விட்டான் அவன்.

நல்ல வேளையாக அந்தச் சந்தில் அந்தச் சமயம் யாரும் இல்லை. கீழே சாய்ந்தவனின் பையைச் சோதனை செய்து அதில் உள்ளதைத் தன் பைக்குள் மாற்றிக் கொள்ள கதிர்வேலுவுக்கு அதிக நேரம் பிடிக்க வில்லை. நியூஸ் பேப்பர் போட்டுச் சுற்றி நூல் போட்டுக் கட்டிய, சீட்டுக் கட்டளவு இருந்த ஒரு சிறிய கட்டு, ஒரு மணிபர்ஸ், ஒரு

கவர்;.........இல்வளவுதான் கிடைத்தன. ஒரு விநாடியில் தன் காரியத்தை முடித்துக் கொண்டு மேலே நடந்து தங் கசாலைத் தெருவுக்குள் திரும்பி விட்டான் கதிர் வேலு.

அவன் நடையைத் துரிதப் படுத்த வில்லை. அநாவசிய மாக அவசரப்படுவது சந்தே கத்துக்கு இடம் தரும் என்று அவன் உணர்ந்தான். சாவ தானமாக, ஆனால் ஏதோ காரியமாக ஓரிடம் நோக்கி நடப்பவன் போல நடந்து, ஐந்தாறு நிமிஷங்களுக்குள் ளாகவே சென்டிரல் ஸ்டே ஷனை அடைந்து விட்டான்.

அதிர்ஷ்ட தேவதை அங் கும் பின் தொடர்ந்தாள் அவனை. அன்று இரண்டு மெயில்கள் மூன்று மணி நேரம் லேட்டாக வந்திருந் தன. ஸ்டேஷனில் ஒரே கூட் டமும் குழப்பமுமாக இருந் தது. ஹிக்கின்பாதம்ஸுக் குக் கெதிரில் நின்று ஒரு தின சரிப் பத்திரிகையை வாங்கிக் கொண்டு, சாவதானமாகப் புதுசாகச் சம்பாதித்திருந்த பர்ஸைத் திறந்தான். சின்ன பர்ஸ் தான், ஆனால் நிறைந் திருந்தது. குறைந்தது நாற் பது ஐம்பது ரூபாயாவது இருக்கும். ஒருநாள் செலவுக் குப் போதும் என்று திருப்தி யுடன் எண்ணியவனாக ஒரு ரூபாய் நோட்டைக் கொடுத் துச் சில்லரை மாற்றிக் கொண்டு, வாங்கிய பேப்ப ரைப் பிரித்துப் பார்த்த படியே ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தான்.

டாக்ஸி அமர்த்த எண்ணி னான். பிறகு வேண்டாம் என்று பஸ் ஸ்டாண்டிற்கு நகர்ந்தான்.

4

சம்பாதித்தவை

ஜியார்ஜ் டவுனில் ஸலூ னில் க்ஷவரம் செய்து கொண் டான் கதிர்வேலு. புது வேஷ்டி, புது ஷர்ட்டு, பனி யன், அங்கவஸ்திரங்கள் வாங்கிக் கொண்டான். போர்டிங் லாட்ஜிங் ஹோட் டல் ஒன்றில் இரண்டு நாட்க ளுக்கு அட்வான்சு கொடுத்து ஒரு அறையை வாடகைக்கு எடுத்துக் கொண்டான். ஸ்நா னத்தை முடித்துக் கொண்டு, சாப்பிட்டு விட்டுத்தான் மற்ற காரியங்களைப் பற்றி சிந்திப்பது என்கிற ஒரு எண்ணத்துடன் எல்லாவற் றையும் முடித்தான். அறைக் குள் போய் அறைக் கதவைத் தாளிட்டுக் கொண்டு மின் சார விசிறியைத் திருகிவிட்டு விட்டு, அதன் கீழ் ஈஸிசேரில் சாய்ந்தபடியே ஒரு விநாடி யோசனையில் ஆழ்ந்திருந் தான். பிறகு அன்று தான் சம்பாதித்த சாமான்களை எடுத்து வைத்துக் கொண்டு மேஜையண்டை போய் உட் கார்ந்தான்.

பர்ஸில் இருபது ஒரு ரூபாய் நோட்டுகள், ஐந்து பத்து ரூபாய் நோட்டுகள், இரண்டு ஐந்து ரூபாய் நோட்டுகள், ஆக எண்பது ரூபாயும் ஒரு ரூபாய்க்கு மேல் சில்லறையும் இருந்தன. அன்று காலை அதுவரை செலவானது ஒரு இருபது ரூபாயாவது இருக்கும். ஆக அந்தப் பர்ஸில் நூறு ரூபாய்க்கு மேல் இருந்தது. நூறு ரூபாய்க்கு மேல் பர்ஸில் வைத்திருந்தவன் தன் பைக்குள் கைவிட வேண்டிய அவசியம் என்ன என்று கதிர்வேலு யோசித்தான். திருடித் திருடிப் பழக்கம், கையில் பணமுள்ள போதும் திருடச் சொல்லியது என்கிற காரணமாக இருக்கலாம். அல்லது...... அந்தப் பர்ஸே வேறு யாருடைய சொத்தாகவாவது இருக்கலாம். திருடனிடம் திருடியது சரியான காரியம்தான் என்று தனக்குத் தானே சபாஷ் கூறிக் கொண்டான் கதிர்வேலு. எது எப்படியானால் என்ன? சென்னையில் சிறையிலிருந்து விடுபட்ட முதல் நாளே சுலபமாகவே நூறு ரூபாய்க்கு மேல் சம்பாதித்தாகி விட்டது. எதிர்பாராத அதிர்ஷ்டம்தான் அது. நாலு நாளுக்குள் திட்டம் போட்டு வருவாய்க்கும் மேல் கொண்டு ஆக வேண்டியதற்கும் ஏற்பாடு செய்து கொள்ளலாம். பணத்தை எடுத்து சட்டைப் பையில் பத்திரப் படுத்திக் கொண்டான். அந்தப் பர்ஸை யார் கண்ணிலும் படாமல் எங்காவது மறைத்து விட வேண்டும் என்று ஞாபகப் படுத்திக் கொண்டான்.

பிறகு சீட்டுக் கட்டுப் போல இருந்ததைக் கட்டை அவிழ்த்துப் பிரித்தான். உள்ளே இரண்டு கத்தைகள் ஒரு ரூபாய் நோட்டுகள் இருந்தன. ஒரு கத்தையில் நூறு ரூபாயாக இருநூறு ரூபாய்கள் — நோட்டுகளின் நம்பர்கள் வரிசையாக இருந்தன. இருநூறு ரூபாய்! தேவலையே என்று எண்ணி முடியுமுன் ஒரு கத்தையில் ஒரே நம்பருள்ள இரண்டு நோட்டுகள் இருந்ததைக் கவனித்து விட்டான். ஒஹோ! கள்ள நோட்டுகளா? சுவாரசியமான விஷயம்தான். பர்ஸிலிருந்த நோட்டுடன் இந்த நோட்டு ஒன்றை ஒப்பிட்டுப் பார்த்தான். இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் நன்றாகவே தெரிந்தது. இதைத் தன் கையில் வைத்திருப்பதே ஆபத்தான காரியம்தான்— ஆனால் அதை உபயோகமும் படுத்திக் கொள்ளலாம்.

மூன்றாவதாக அந்தக் கவர். அதன் மேல் ஒரு விலாசமும் இல்லை. கவர் ஒட்டியிருந்தது. அதைப் பிரித்துப் பார்த்தான். அதில் மிஸ் சுப்புலக்ஷ்மி, 12 மாகாளித் தெரு, திருவல்லிக் கேணி என்று ஒரு விலாசமும்

அதன்கீழ் 4, 3, 8 என்று மூன்று இலக்கங்களும் இருந்தன. அந்த இலக்கங்களின் அர்த்தமும் கதிர்வேலுவுக்கு விளங்கவில்லை. ஆனால் விலாசம் உபயோகப்படும்.

எல்லாவற்றையும் கட்டிலடியில் பத்திரப் படுத்திவிட்டு ஈஸிசேரிலிருந்து ஹோட்டல்காரர்கள் தந்திருந்த கட்டிலுக்கு நகர்ந்தான் கதிர்வேலு. மெத்தை உறுத்தியது. மூட்டைப்பூச்சியும் உண்டு போலத்தான் இருந்தது. ஆனால் படுத்து ஒரு விநாடிக்குள்ளாகவே கண்ணை மூடிவிட்டான்.

ஹோட்டல் கடிகாரம் மணி ஒன்றடித்தது அச்சமயம்.

அசதிக்கு ஒன்றும் விசேஷ காரணமில்லைதான், எனினும் கதிர்வேலு ஆழ்ந்த தூக்கத்திலிருந்து கண் விழிக்கும்போது மணி ஐந்தடித்து விட்டது.

5

மாகாளித்தெரு

முகம் கழுவிக்கொண்டு, புதுச்சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டு, பையில் ஒரு பத்திருபது சில்லறையுடன் வெளியே கிளம்பினான் கதிர்வேலு. முதலில் இந்த மிஸ் சுப்புலக்ஷ்மியை பார்த்து விடுவது என்கிற உத்தேசம் அவனுக்கு. சுப்புலக்ஷ்மி அம்மாள் என்றிருந்தால், யாரோ ஏதோ என்று சொல்லலாம். மிஸ் சுப்புலக்ஷ்மி என்றிருந்ததற்கு, அதுவும் அவள் விலாசம் அந்த ஆசாமியிடம் இருந்ததற்கு காரணம் என்னவாக இருக்கமுடியும்? மிஸ் சுப்புலக்ஷ்மி மாணவியாக இருக்கலாம்—அல்லது சினிமாக்காரியாக இருக்கலாம். சினிமாக்காரியாகத்தான் இருக்கும். மிஸ் சுப்புலக்ஷ்மி யார் என்று அறிந்து கொண்டபின் அவளை எப்படி அணுகுவது, அணுகி என்னதான் செய்வது, சொல்வது என்று முன் கூட்டியே தீர்மானிப்பது நடக்காத காரியம். அவ்வப்போது சமய சந்தர்ப்பத்திற்கேற்றவாறு நடந்துகொள்ளத் தனக்கு உள்ள சாமர்த்தியத்தை நம்பியே கதிர்வேலு நடந்தான்.

சென்னை மாநகரம் இந்த மூன்று வருஷங்களில் அவ்வளவாக மாறிவிருந்தது என்று சொல்ல முடியாது. ஆனால் சென்னை மாநகர வாசிகள் ரொம்பவும் மாறியிருந்தார்கள் என்பது வெளிப்படையாகவே தெரிந்திருந்தது. முதல் விஷயம் பணப்புழக்கம் ஏராளமாக இருந்தது. பஸ் ஸ்டாண்டிலோ ஹோட்டலிலோ இதற்கு முன் எந்த நாளிலும் இவ்வளவு கூட்டத்தை தான் கண்டதில்லைஎன்று கதிர்வேலு எண்ணினான். இவ்வளவு கூட்டமும் தினம் ஏராளமாய்ப்

பணம் செலவு செய்துகொண்டிருந்தது. பணம் தண்ணி பட்ட பாடுதான்! அவ்வளவு சுலபமாகச் செலவு செய்ய சம்பாத்யமும் சுலபமாகத்தான் இருக்கவேண்டும்—நிறையவும் இருக்க வேண்டும். மூன்று வருஷங்களுக்கு முந்தி என்றால் கதிர்வேலுவைப்போன்ற கலைஞனும் கூட ஒருநாள் பூராவும் நாலு இடத்தில் வேலை செய்துதான் நூறு ரூபாய் சம்பாதிக்க முடியும். இப்பொழுது ஒரு பொழுதில் நூறுக்கும் அதிகமாகவே கிடைத்தது! சுலபமாகவே கிடைத்தது.

ரூபாய் மட்டுமல்ல. மிஸ் சுப்புலக்ஷ்மியைப் பார்க்கிற அதிர்ஷ்டமும் கூடவே கிடைக்க இருந்தது.

திருவல்லிக்கேணியில் மாகாளித் தெருவைக் கண்டுபிடிக்க கதிர்வேலுவுக்குச் சற்று நேரம் பிடித்தது. தெற்கு வடக்கான ஒரு குறுகிய சந்து. இருபுறமும் உயரமான வீடுகள் பல வரிசையாக நெருங்கி எழும்பியிருந்தன. மற்ற தெருக்களில் இன்னும் இருட்டவில்லை—அஸ்தமனமாகிற சமயம்தான். இந்தத் தெருவில் இருட்டத் தொடங்கியது.

தெருவில் ஜனநடமாட்டம் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். இந்தத் தெருவில் புது ஆசாமி தோன்றினால் தெருவாசிகள் கவனிப்பது மட்டுமல்ல; கவனித்து ஞாபகமும் வைத்துக் கொள்வார்கள் என்றுதோன்றிற்று கதிர்வேலுவுக்கு. சற்று ஜாக்கிறதையாகத்தான் நகர வேண்டும்—அடுத்த விநாடி எந்த நிழலிலிருந்து யார் தன் மேல் பாய்வார்களோ என பயந்தே தீரவேண்டும் என்று தோன்றிற்று.

12-ம் நம்பர் வீடு தெரு மத்தியில் இருந்தது. இரண்டு மாடிக்கட்டிடம். தெற்குப் பார்த்த வீடு. உள்ளே மின்சார விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. பெரிய வீடுதான். ஆனால் அதிகமான ஆசாமிகள் இல்லை என்று தோன்றிற்று. அதில் எப்பொழுதுமே அதிகமான ஆசாமிகள் வசித்ததில்லை போலத் தான் இருந்தது. வாசல், திண்ணை எல்லாம சுத்தப்படுத்தாமல் புழுதியடைந்து, கரை படிந்து இருந்தன. யாராவது அந்தக் குப்பையில் அடிவைத்தால் சுவடு பதியும் போலிருந்தது.

உள்ளேபோக விரும்பவில்லை கதிர்வேலு. மிஸ் சுப்புலக்ஷ்மி வெளியே வந்தால் வரட்டும்—விரோதியா, விரோதிக்கு விரோதியா என்று நிச்சயமாகத் தெரியாத ஊஹிக்கவும் முடியாதபடி ஒரிடத்தில் ஆழந்தெரியாமல் கால்விட்டு விட்டு மாட்டிக்கொள்ள அவன் தயா

ராக இல்லை. அது அநாவசிய மான அசட்டுத் தைரியம் என்று எண்ணினன். காலையில் க்ஷவரம் பண்ணிக்கொண்டதும் புது வேட்டி வாங்கி உடுத்திக்கொண்டதும் தவறு என்கிற எண்ணம் தலைதூக்கியது. சிறையி லிருந்து விடுதலை பெற்ற சமயம் இருந்த கோலத்திலேயே இப்பொழுதும் இருந்தால், சௌகரியமாக எதிர் வீட்டுத் திண்ணையில் அன்ன ஆகாரமின்றி களைத்துப்போன வழிப்போக்கன் மாதிரி படுத்து விடலாம்—படுத்த படியே— மிஸ் சுப்புலக்ஷ்மியின் வீட்டையும் கண்காணித்துக் கொள்ளலாம். ஆனல் வழிப்போக்கன் யாரும் தவறி அந்தச் சந்தில் நுழைந்துவிட சந்தர்ப்பம் ஏற்படுமா என்பது சந்தேகாஸ்பதமான விஷயந்தான். எந்த வழிப்போக்கனுடைய நியாயமான வழியையும் விட்டு விலகியிருந்தது அந்தத் தெரு.

மாகாளித்தெரு 12-ம் நம்பர் வீட்டுக்கு நேர் எதிர் வீட்டுத் திண்ணையில் புழுதியையும் அசுத்தத்தையும்பொருட்படுத்தாமல் துண்டை விரித்துக்கொண்டு படுத்திருந்த ஓர் உருவம் இப்பொழுதுதான் அவன் கண்ணில் பட்டது. சூழ்ந்துகொண்டிருந்த இருளில் முதலில் அவ்வுருவம் கதிர்வேலுவின் கண்களிலும் படாதிருந்ததில் ஆச்சர்யம் ஒன்றுமில்லை. உருவமும், உருவத்தின் பொதுத் தோற்றமும், துணிமணிகளும் வழி தவறி வந்துவிட்ட நாலுநாள் பட்டினியாகக் கிடந்த, ஒரு வழிப்போக்கனுடையதைப் போலத்தான் இருந்தன. ஆனல் அந்த "வழிப்போக்கனும்" 12-ம் நம்பர் வீட்டு வாசலில் ஒரு கண் வைக்கக் கூடிய மாதிரியே தான் படுத்திருந்தான்—உண்மையில் தான் உத்தேசித்திருந்த மாதிரியே அந்த வழிப்போக்கனும் அதே காரியத்தைத்தான் செய்கிருன் என்று தோன்றியது கதிர்வேலுவுக்கு.

அந்த எண்ணம் உதித்தவுடனேயே அவனுக்கு புது யுக்தி தோன்றியது

6

"யசமான்"

தைரியமாக 12-ம் நம்பர் வீட்டுக்கு எதிர் வீட்டுத் திண்ணை ஏறிப் படுத்திருந்த அந்த வழிப்போக்கனை அணுகினன் கதிர்வேலு.

அரைக்கண் விழித்தபடியே உறங்குவதுபோல் பாசாங்கு செய்து கொண்டிருந்த அந்த வழிப்போக்கன் ஏதோ காரணமாகத்தான் அங்கு வந்திருந்தான் என்று தீர்மானிக்க கதிர்வேலுவுக்கு அதிக நேரமாகவில்லை. அரைக்கண் மூடி

யிருந்தவன் கதிர்வேலு நெருங்கியபோது முழுக் கண்ணையும் மூடிவிட்டான் என்று கதிர்வேலு கவனித்தான்.

"யசமான் அனுப்பிச்சாரு!" என்று மெதுவாக கதிர்வேலு கூறியபின்தான் அந்த வழிப்போக்கன் கண் விழித்தான்.

"யாரப்பா அது" என்று மெதுவாகக் கேட்டுக் கொண்டே எழுந்தான் வழிப்போக்கன்.

"யசமான் உடனே உன்னை மைலாப்பூருக்கு வரச் சொன்னாரு. உனக்குத்தான் இடம் தெரியுமே!" என்றான் தைரியமாகவே. எதிரி முரண்டினால் தற்காப்புக்குத் தனக்குப் போதிய பலமுண்டு என்று இதற்குள் தீர்மானிக்க போதிய அவகாசம் இருந்தது அவனுக்கு.

"நீ யார்? தெரியவில்லையே!" என்றான் வழிப்போக்கன்.

"யசமான் கிட்டே இருக்கிறவங்க எல்லோரையுமே உனக்கு தெரியுமோ. தவிர நானும் புதுசு" என்றான் கதிர்வேலு.

"ராமசாமியின் புது ஆட்களிலே ஒருத்தனா நீ? அதான் இவ்வளவு தைரியமா, யாராவது கவனிச்சுடப் போறாங்களேன்னு பயமில்லாமே வந்து கதை பேசறே......சரி நான் போறேன். இங்கே...'

"இங்கே ஆளுக்கு இனிமே அவசியம் இல்லேன்னாரு யசமான்" என்றான் கதிர்வேலு தைரியமாக.

ஏதோ சந்தேகப் பட்டவன்போல அந்த ஆசாமி ஒரு விநாடி கதிர்வேலுவை நோக்கினான்.

கதிர்வேலு சொன்னான், "நம்ப யசமானரைப் பத்தி......"

வழிப்போக்கன் குறுக்கிட்டான் "ஐயா புது ஆசாமியே! நம்ம யசமானரைப் பத்தி நீர் கவலைப் படாதேயும். சொல்ற வேலையை ஜாக்கிரதையாச் செய்து விட்டுக் கிடவும். எப்படி நடக்குது பார்க்கலாம்!" என்றான்.

தெரு விளக்குகளெல்லாம் எரியத் தொடங்கின. அதே சமயம் 12-ம் நெம்பர் வீட்டு வாசல் விளக்கும் எரியத் தொடங்கியது.

உள்ளே யிருந்து பதினெட்டு வயசிருக்கும் ஒரு யுவதி வெளியே வந்தாள். அவள் யார் என்ன என்று யாரும் குறிப்பாகச் சொல்லாமலே கதிர்வேலுவுக்குப் புரிந்துவிட்டது. அவள் ஒரு தாசி—தாசிதான்; நன்றாகவே தெரிந்தது, பார்த்தவுடனேயே. அவள் தான் மிஸ் சுப்புலக்ஷ்மி.

அவனைப் பின் தொடர்ந்து வந்த ஆசாமியைக் கண்டவுடன் கதிர்வேலு சற்றே திடுக்கிட்டான். நிமிர்ந்து நின்றான். அன்று காலையில் அவன் பையில் கைவிட முயன்று, முகவாய்க் கட்டையில் குத்து வாங்கித் தன் பையில் இருந்ததை எல்லாம் இழந்த அந்த ஆசாமிதான் அவனைத் தொடர்ந்து வந்தது. அவன் முகவாய்க் கட்டை சிவந்து வீங்கியிருந்தது என்பதைத் திருப்தியுடன் கவனித்தான் கதிர்வேலு, "ராமசாமியையே அனுப்பிட்டாரு யசமான். அதான் இனிமே எனக்கு இங்கு வேலை இல்லேன்னு" என்றான் வழிப்போக்கன்.

"ஓஹோ! அவன்தான் ராமசாமியா?" என்று கதிர்வேலு— சொல்லவில்லை, நினைத்துக் கொண்டான். யசமானுக்கு ரொம்ப வேண்டிய ஒரு தளகர்த்தனை முதல் மூச்சிலேயே தோல்வியுறச் செய்துவிட்ட ஒரு பெருமிதத்துடன் கதிர்வேலு குனிந்து தன் மார்பைப் பார்த்துக் கொண்டான். ஹரிலோடியில் இருள் அதிகமாக இருந்த பிரதேசத்திற்கு நகர்ந்து நின்றான்.

"யசமான்" ஆள், அரவம் காட்டாமல் நேரே வீட்டுக்குள்ளிருந்து வருபவன் போல வந்து படியிறங்கித் தெருவோடுகடந்துபோனான். அவன் அந்தப் பக்கம் இந்தப் பக்கம் திரும்பிப் பார்க்கவேயில்லை. யசமான் ஓரளவு வேலைக்குத் தகுதியான ஆட்களைப் பொறுக்கும் ஆற்றல் உள்ளவன் போலத்தான் தோன்றியது கதிர்வேலுவுக்கு. அந்த வழிப்போக்கனைத் தொடர்ந்து போயிருந்தால் ஓரளவு ரசமாகத்தான் இருந்திருக்கும் மைலாப்பூரில் "அந்த இடம்" எங்கிருந்தது என்பதை கதிர்வேலுவும் அறிந்து கொண்டிருக்கலாம்.

ஆனால் தான் இருந்த இடத்திலிருந்து கண்ட காட்சி இனிமையானதாகத்தான் பட்டது கதிர்வேலுவுக்கு. மிஸ் சுப்புலக்ஷ்மி உண்மையிலேயே அழகிதான்!

7

இரண்டாவது சந்திப்பு

மிஸ் சுப்புலக்ஷ்மியும், ராமசாமியும் மாகாளித் தெரு 12-ம் நம்பர் வீட்டு வாசல் விளக்கு வெளிச்சத்தில் அதிக நேரம் நிற்கவில்லை. ஆனால் அப்படி நின்ற ஐந்து நிமிஷங்களில் ஓர் ஐந்து தடவைகள் ராமசாமி தன்னுடைய புண்பட்ட முகவாய்க்கட்டையை மெதுவாகத் தடவிக் கொடுத்துக் கொண்டான் என்பதை ஆனந்தத்துடன் பார்த்தான் கதிர்வேலு. சிறையிலிருந்த மூன்றுவருஷங்களில் தன் கைத்திறமை துருப்பிடித்து

விடவில்லை என்கிற திருப்தி ஏற்பட்டது அவனுக்கு.

சுப்புலக்ஷ்மியும், ராமசாமியும் உள்ளே போன பிறகும் ஒரு பத்து நிமிஷ நேரம் கதிர்வேலு இருட்டிலேயே சந்தடி காட்டாமல் நின்றான். தெருவிலேயும் சந்தடியே யில்லை. யாரும் அவனைக் கவனித்ததாகவும் தெரியவில்லை. தாசியும் அவள் நண்பனும் யாரையோ எதிர் பார்த்துக் காத்திருப்பவர்கள் என்று கதிர்வேலுக்குத் தெளிவாயிற்று. இன்னும் பத்து நிமிஷம், இருபது நிமிஷம். ஜாஸ்தியானல் அரைமணி. அதற்குள் அவர்கள் எதிர்பார்த்திருந்தவன் வந்துவிடுவான். பிறகு எப்படி இருக்குமோ? சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தான் கதிர்வேலு. ராமசாமியை இரண்டாவது தடவையும் சந்தித்துவிடுவது என்று தான் பதுங்கி இருந்த இடத்திலிருந்து கிளம்பி தெருவைக் கடந்து 12-ம் நம்பர் வீட்டுப்படி ஏறினன்.

கதிர்வேலுவுக்குக் குண்டுத் தைரியம்தான். ராமசாமி அங்கு தனியாக இருந்தானு? அவனுடன் வேறு ஆண்கள் இருந்தார்களா என்பது தெரியாது. துணிச்சலில்லாவிட்டால் எதுவும் பலிக்காது என்பதுதான் கதிர்வேலுவின் கட்சி.

த்விரவும் ராமசாமி எவ்வளவுதான் தன் முகவாய்க் கட்டையைத் தடவிக் கொடுத்துக் கொண்டாலும், காலையில் தன்னைக் கூர்ந்து கவனித்திருக்க மாட்டான் என்பது நிச்சயம். ஸ்நானம், நல்ல சாப்பாடு, தூக்கம், க்ஷவரம், புதுத்துணிகள் முதலியனவும் சேர்ந்து கதிர்வேலுவைப் புது மனிதனுக்கி யிருந்தன. அவனுக்குத் தெரியாது இது இரண்டாவது சந்திப்பு என்பது என்று புன்சிரிப்புடன் தனக்குத்தானே ஞாபகப் படுத்திக் கொண்டான் கதிர்வேலு.

வேலு வாசற்படியண்டை நின்று வேண்டுமென்றே சற்று மெதுவாக "வீட்டிலே யாரு?" என்று கூப்பிட்டான். அவன் குரல் ரேழியைத் தாண்டி யார் காதிலும் விழுந்திராது என்பது நிச்சயம். குரலைத் தொடர்ந்து தானும் ரேழி இரண்டாவது வாசற்படியண்டை போய் விட்டான்.

விசாலமானதொரு நடுக்கூடத்திலே பித்தளைக் குமிழ்கள் வைத்து அலங்கரித்திருந்த ஓர் அகன்ற ஊஞ்சற் பலகையில் உட்கார்ந்து ஊஞ்சலாடிக் கொண்டிருந்தாள் மிஸ் சுப்புலக்ஷ்மி. ஊஞ்சல் கிறீச்சிடவில்லை. அவள் கட்டியிருந்த புதுப் பட்டுச் சேலை சரசரத்தது. உதடுகள் அசாதாரணமாகச் சிவக்க வாயிலிருந்து வெற்றிலையைக் குதப்பிக்கொண்டே அவள்

ராமசாமியுடன் பேசிக் கொண்டிருந்தாள். அவள் வீற்றிருந்ததும், பேசியதும், நகைத்ததும், எல்லாமே அழகாகத்தான் இருந்தன என்று எண்ணினான் கதிர்வேலு. இவள் பக்கத்திலேயே தன்னை வைத்திருப்பாரானால் தானும் அந்தப் பெயர் தெரியாத யசமானரின் ஆட்களில் ஒருவனாக இருக்கத் தயங்க வேண்டிய அவசியம் ஏற்படாது என்று எண்ணினான் கதிர்வேலு.

ரேழியில் வந்து நின்ற ஆசாமியைப் பார்த்தும் முக வாய்க கட்டையைத் தடவிக் கொண்டே பிரம்பு நாற்காலியில் தீனி தின்றுவிட்டுக் கிடக்கிற வெண்ணாந்தை மாதிரிக் கிடந்த ராமசாமி "யார் அது?" என்று கேட்டுக் கொண்டே வந்தான்.

"திறந்த வீட்டில்......" என்று மிஸ் சுப்புலக்ஷ்மி உட்கார்ந்திருந்தபடியே கூறியது அவன் காதில் விழுந்தது.

ராமசாமி தன்னை நெருங்கி வந்ததும், மெல்லிய குரலில் "யசமானிடமிருந்து வரேன்" என்றான் கதிர்வேலு.

வேகமாக வந்த ராமசாமி சட்டென்று நின்று பயபக்தி மிகுந்த குரலில் "என்ன?" என்றான்.

"யசமான் உங்களைச் சந்திக்கணுமின்னார். இன்னிக்

கார்த்தாலே ஏதோ கவரையும், ஒரு இருநூறு ரூபாயையும் எங்கேயோ விட்டுப் பீட்டிங்களாம். அதைப்பத்தி இதுவரையில் தனக்குத் தெரிவிக்காததற்குக் காரணம் இன்னும் அரைமணி நேரத்தில் தெரிவிக்கவேண்டும் என்றார்.''

"கவரும், பணமுமா?'' ராமசாமி சமாளித்துக் கொள்ள முயன்றான். முகவாய்க் கட்டையைத் தடவிக் கொள்ளப் போன கையைச் சட்டென்று நிறுத்திக் கொண்டான்.

"எனக்குத் தெரியாது, யசமான் சொல்லச் சொன்னதைச் சொல்லிவிட்டேன். நான் வரட்டுங்களா?'' என்று கிளம்பினான் கதிர்வேலு.

"நீ யார்! இதுக்கு முன்னே பார்த்த மாதிரியும் இருக்கு—பார்த்ததில்லைப் போலேயும்......''

"நேத்து ஒரு தரம் உங்களைப் பார்த்திருக்கிறேன். இது ரெண்டாவது தடவை நான் உங்களைப் பார்ப்பது'' என்றான் கதிர்வேலு ஓரளவு உண்மையுடன்.

"நேத்து......ஓ அங்கேயா? சரி, நீ போ'' என்றான் ராமசாமி.

படியிறங்கித் தெருவுக்கு வந்த கதிர்வேலு நிமிர்ந்து திரும்பிப் பார்க்கவில்லை. ராமசாமி உடனே உள்ளே போய்விடாமல் வெளி வாசல் திண்ணைக்கு வந்து தெருவிலே போய்க் கொண்டிருந்தவனையே பார்த்துக் கொண்டு நின்றான். இதைக் கதிர்வேலு திரும்பிப் பார்த்து அறிந்து கொண்டான் என்று சொல்வதற்கில்லை. அப்படித்தான் என்று உணர்ந்து கொண்டான். எதிர் வீட்டுத் திண்ணை இருட்டில் பதுங்கி 12-ம் நம்பர் வீட்டை மேலும் கவனிக்க வேண்டும் என்கிற ஆசையை அடக்கிக் கொண்டு நேரே நடந்து சென்று மாகாளித்தெருத் திருப்பம் திரும்பினான்.

எதிரில் வந்தது ஒரு பெரிய ஸலூன் கார் அதில் பின் ஸீட்டில் உட்கார்ந்திருந்தவளைப் பார்த்தவுடன் பிரமித்துப் போனான் கதிர்வேலு. ஒரு நிமிஷம் மேலே நடக்கவும் மறந்து நின்று விட்டான்.

அந்தப் பெரிய ஸெடான் கார் மாகாளித் தெருவுக்குள் தான் திரும்பியது.

(தொடரும்)

விளம்பரம்

சினிமா நடிகைகளின் பிளாக் மலிவான விலைக்கு கிடைக்கும்.

பாசரசு காரியாலயம்
45-16 அரண்மனைகாரத் தெரு,
சென்னை 1.

Printed by P. Arunachalam at the Commercial Printing & Publishing house 46, Armenian St., Madras 1. Edited by M. S. Basu & Saraswaith Basu Published by M. S. Basu at, 46 Armenian Street, Madras

மூர்த்தி பிரதர்ஸாரின் சிறந்த தயாரிப்பு

"தியாகி"

சங்கீதம், ஆச்சர்யம், காதல், நடனம், நிறைந்த
உன்னத தமிழ் சித்திரம்

வி. என். ஜானகி, என். கிருஷ்ண மூர்த்தி, சேதுராமன்
வி. எஸ். மணி, குளத்து மணி, அங்கமுத்து
முதலியோர்கள் திறம்பட நடிப்பது

ஆலயப் பிரவேசம், அஹிம்ஸை, ஹரிஜனங்களின்
முன்னேற்றம் இவைகளைக் கொண்டே கதை

விவரங்களுக்கு:

மூர்த்தி பிரதர்ஸ்
746, திருவல்லிக்கேணி ஹைரோட், சென்னை 5.

நாரதர் சொல்லுகிறார்



பாசரசு என்ற புனை பெயருடன் எழுதும் இளம் எழுத்தாளர் சரசுவதி என்ற பெயரில், தொடர்ச்சியாகச் சில வாழ்க்கைச் சித்திரங்களை எழுதியிருக்கிறார். 'என் மனைவி! என் மனைவி!' என்று இந்த வாழ்க்கைச் சித்திரங்களைத்திலும் சரசுவதி என்ற ஒரு பெண்ணைக் குறிப்பிடுகிறார் பாசரசு. பாசரசுவின் அசல் வாழ்க்கைத் துணைவியின் பெயரும் சரசுவதி. அவரே இப்புதகத்திற்கு அழகாக முகவுரை எழுதியிருக்கிறார். இது ஒரு புதுமுறைதான். அவர் இந்த முகவுரையில், 'இதைப் படிப்பவர்கள், பெண்கள் பொல்லாதவர்கள் என்று தான் அபிப்பிராயப் படுவார்கள்' என்று குறிப்பிட்டிருக்கிறார். அது முற்றிலும் உண்மை. கதாநாயகி சரசுவதி மகாபொல்லாதவள்தான். தனது நாயகனை மூக்கணாங்கயிறை இழுத்து மாட்டை அடக்கி வலித்துக் கொண்டு போவதுபோல் நடத்திச் செல்கிறாள். சரசுவதியைப் பட்டணத்திற்கும், மைசூருக்கும் அழைத்துக் கொண்டு போகும் கதாநாயகர், போன இடத்தில் படும் பாட்டைப் பார்த்தால், இந்தப் பெண்டாட்டி என்ற ஆத்மாவை எங்குமே அழைத்துப் போகக் கூடாது என்ற வைராக்கியமே ஏற்படும். வாழ்க்கையிலே இம்மாதிரியான பெண்களும் அபூர்வமாக இருக்கிறார்கள். அதனாலேயே கற்பனைச் சித்திரங்களானாலும், அத்தகைய பிராணிகளைக் குறித்த காதல் ஆவலோடு வாசிக்கிறோம்.

எளிய தமிழில், வாழ்க்கையிலே பல குடும்பங்களில் நடக்கக்கூடிய சம்பவங்களைக் கோர்வையாக எழுதியிருக்கிறார் பாசரச. நடுவிலே நிறைய ஹாஸ்யமும் இருக்கிறது.

ஒரு டானிக்கிலே டாக்டர் சொற்படி வேளைக்கு இரண்டு ஸ்பூன் ஊற்றிக் கொடுப்பதற்குப் பதிலாக, ஏகமாக ஊற்றித் தனது கணவனுக்குக் கொடுக்கிறாள் சரசு. ஏன் இப்படி என்று கணவன் கேட்க, 'தேங்காய் யெண்ணெய் ஊற்றிவைக்க புட்டி தேவை; அதற்காகவே டானிக்கைச் சீக்கிரம் காலியாக்குகிறேன்' என்கிறாள் சரசு. மற்றொரு நாள் அசல் டானிக் புட்டி வைக்க வேண்டிய இடத்தில், தேங்காயெண்ணெயைக் கொண்ட பழைய டானிக் புட்டியை வைத்துவிட்டு, அதிலிருந்த தேங்காயெண்ணெயைப் பாலில் டானிக் என்று ஊற்றிக் கொடுத்து விடுகிறாள் சரசு. தமாஷாக இல்லையா?

அழகாக அச்சிட்டு, ரூ. **1-8-0** விலை வைத்து இதை வெளியிட்டிருக்கிறார்கள். **சென்னை, பாசரசு காரியாலயத்தார்.**